T. 497.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பதின்மூன்றாந்தொகுதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1914—1915.

செந்தமிழின்

பதின்மூன்றாந்தொகுதியுள்ளுறை.

அசோகனது ஆக்ஞா பத்திரங்கள்:—	ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகரவர்கள்.	௪௨௯
அப்பர்தேவாரத்தாற் கொள்ளக்கிடக்கும் கீரனார் யார்? :—	,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.	௨௦௭
அரசவாழ்த்து :—	,, ரெ. அப்புவையங்காரவர்கள்.	௩௫௦
ஆக்கச்சொல்விளக்கம்	,, ம. நா. சோமசுந்தரம்பிள்ளையவர்கள்.	௪௪௬
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக் குறிப்பு :—	,, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனரவர்கள்.	௨௩௫
இலங்கைமகாவம்சமும் தென்னிந்தியசரித்திர ஆராய்ச்சியும்:—	,, S. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், M. A.	௧௨, ௧௩௧
இளங்கோவடிகள் குறித்துள்ள பழைய சரிதங்கள் :—	,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்.	௨௧௦
உயிரின்தன்மை :—	,, J. M. நல்லசாமிப்பிள்ளையவர்கள், B. A. B. L.	௩௨௫, ௩௮௬
ஒருதாய் தன்குழந்தையைப்பற்றிக்கூறியது	,, V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.	௧௫௦
கீரன்-நற்கீரன் :—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௩௪௦
சாசனபரீக்ஷை :—	,, T. A. கோபிநாதராவ் அவர்கள், M. A.	௧௭௧

சாசனமும் தமிழ்ச்சரிதங்களும்:—	ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்கள்.	௨௬௫
சிந்தாமணியுரையிற் சிறிதொருசந்தேகம்.	,, T. S. குப்புஸ்வாமிசாஸ்திரியவர்கள்.	௪௧௬
சிவரகசிய ஆராய்ச்சி:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௧௮௬
சிறுபஞ்சமூலம் :—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௩௪௮
சுந்தரகாண்டம் (கம்பர்):—	,, M. S. சேஷையங்காரவர்கள்.	௧௬௪, ௨௪௯
செந்தலைச்சிலாசாசனங்களைப்பற்றிய சிலசந்தேகங்கள்:—	,, S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A. F. M. U.	௮௬
செல்வநூல்:—	,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A. B. L.	௩௨, ௧௫௧
செல்வநூல் அநுபந்தம் :—	,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A. B. L.	௩௬
சேதுநாடுந் தமிழும்:—	,, ரா. இராகவையங்காரவர்கள்.	௪௧
சொற்பொருட் காரணம்:—	,, மாகறல், கார்த்திகேயமுதலியாரவர்கள்.	௨௯௩
சோழர்குடி:—	,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்.	௨௦௩
சோழர்தமிழ்ச்சங்கம்:—	பத்திராதிபர்.	௧
தமிழ்ச்சங்கத்தாற் செய்யத்தகுவது:—	ஸ்ரீமத்-S. இராமநாதன்செட்டியாரவர்கள், வைசியமித்திரன் பத்திராதிபர், தேவகோட்டை.	௧௮௨
தமிழ்மொழியும் உயர்தரக்கல்வியும்:—	,, V. முத்துஸாமிஐயரவர்கள், M. A. L. T.	௨௮௪
தமிழபிவிருத்தி:—	,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A. B. L.	௭௨
தமிழபிவிருத்தி:—	,, பக்தவத்ஸலம் அவர்கள்.	௧௮௯
தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—	,, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனரவர்கள்.	௨௬௩

திருப்பெருந்துறை யென்பது தமிழ் நாட்டுஆளுடையார் கோவிலே:—	ஸ்ரீமத்-S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A. F. M. U.	கOஉ
ஷை குறிப்பு:-	,, S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A. F. M. U.	கஉகூ
நமதரசவாகை:—	,, I. M. முருகையவாத்தியார்.	சஉO
நாநாதேசவிவாக முறை:—	,, V. சுப்பிரமணியஐயரவர்கள்.	சகூஉ
நூலாசிரியர்சிஷ்டாசாரம்::—	,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.	உசஎ
நூலாராய்ச்சிமுறை—ஆங்கிலமுந் தமிழும்	,, C. P. வேங்கடராமையரவர்கள், M. A. L. T.	கஅ
பண்டைத்தமிழரும் மரக்கலப்பயிற்சியும்	,, V. முத்துஸாமிஐயரவர்கள், M. A. L. T.	கருரு
பத்திராதிபர் குறிப்பு:—		கஉரு
பத்திராதிபரபிப்பிராயம்:—		சகஅ, சசச
பாரதயுத்தகாலம்:—	ஸ்ரீமத்-A. M. சடகோபராமாநுஜாசாரியரவர்கள்.	உகச
பிழைதிருத்தம்:—	பத்திராதிபர்.	அஅ
புத்தகமதிப்புரை:—	பத்திராதிபர்.	கஉஎ, ககூகூ, ௩Oகூ, சஉச, சஎக
மதிப்புரை:—	பத்திராதிபர்.	அஅ
மதுரைத்தமிழ்ச் சங்கத்துக்களித்த நன்கொடை:—	மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசிகள்.	உகூக
மதுரைத்தமிழ்ச்சங்க மங்கலவாழ்த்து:—	ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	சகூக
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷோத்ஸவ மங்களவாழ்த்து:—	,, கா. ஸ்ரீ. கோபாலாசாரியரவர்கள்.	உருஉ
	,, வி. திருஞானசம்பந்தம்பிள்ளையவர்கள்.	உருஎ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்பதினுன்காம் வருஷோத்ஸவ மங்களவாழ்த்து:—	ஸ்ரீமத்-வி. திருஞானசம்பந்தம்பிள்ளையவர்கள்.	௩௦௫
	,, நல்லசிவன்பிள்ளையவர்கள்.	௩௫௪, ௩௯௬
	,, V.S. அரங்கஸாமிஐயங்காரவர்கள்.	௩௫௬
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகசபையின் தீர்மானங்கள்:—	மதுரைத்தமிழ்ச்சங்கமானேஜரவர்கள்.	௪௨௭, ௪௭௩
மழவர்:—	ஸ்ரீமத்-அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்.	௧௪௪
மறையாவண:—	,, S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A. F. M. U.	௧௭௫
முருகேசபண்டிதர் பாட்டு:—	,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	௪௧௨
மூன்று கஷ்புடங்கள்:-	,, தி. வேங்கடராமையங்காரவர்கள்.	௧௮௦
மேல்நாட்டுநாகரிகம்:-	,, கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், வக்கீல்.	௩௪௫
யசோதரகாவிய ஆராய்ச்சி:—	,, T. S. குப்புஸ்வாமிசாஸ்திரியவர்கள்.	௮௯, ௨௨௩
ரஸாயனநூல்:—	,, R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A. B. L.	௩௧௩, ௩௯௭, ௪௫௩
ராமசரிதப்பாட்டு:— (மலையாளகர்வியம்)	,, T. A. கோபிநாதராவ் அவர்கள், M. A.	௩௦௦
ருதுமதீவிவாஹமும் அதன்பராமர்சமும்	,, M. R. ஸ்ரீநிவாஸையரவர்கள். பத்திராதிபர்.	௩௫௭
விளம்பரம்:—	மதுரைத்தமிழ்ச்சங்கமானேஜரவர்கள்.	௪௭௨
வேத்துணையோர் பரிபாடல்:—	ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	௪௪௨
ஜீவ்யசரிதைகள்:—	,, ஜீ. ஏ. சுந்தரமையரவர்கள்.	௨௪௩

செந்தமிழ்ப் பதின்மூன்றுந்தொகுதியில் வெளிவந்தநூல்கள்.

(முற்றுப்பெற்றவை.)

1. மாறனலங்காரம்:—பத்திராதிபர். ௧, ௨, ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௧௧, ௧௨ பகுதிகள்.
2. திருப்புல்லாணிமாலை:—பத்திராதிபர். ௯, ௧௦ பகுதிகள்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௩.] ஆனந்த௵ கார்த்திகை௴ [பகுதி-௧.

Vol. XIII. November—December, 1914. No. 1.

சோழர் தமிழ்ச்சங்கம்.

"செந்தமிழ்" (தொகுதி-௧௨ பகுதி ௧௨-ல்) ௪௯௯-ம் பக்கத்தொடர்ச்சி.



சோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளி வளவன், தன்னிடத்துப் பரிசுபெற்றுப்போகின்ற ஆலத்தூர்கிழாரைநோக்கி நீ யெம்மை நினைத்து வருவையோ*வென்ன, அதற்கு அவர் உன்னை எந் நாளும் இருபொழுதும் வாழ்த்திப் பாடியிரேனாயின் நான் செய்நன்றிகொன்றேனாவேன் என்றகருத்தொடு பாடிய பாட்டொன்று புறநானூற்றுள் உள்ளது. அப் பாட்டிற்காட்டியசெய்நன்றி யின்னதெனத்தெளிதலா லும், அப்பாட்டிலுள்ள பிறகுறிப்புக்களாலும் சோழர தாட்சியில் ஒரு தமிழ்ச்சங்கமிருந்திருக்கவேண்டுமென்றுதோன்றுகின் றது. அவற்றுள் முதலில் அப்பாட்டிற்காட்டியசெய்நன்றியின்னதென் பதையாராய்ந்துகொண்டு அதற்கிணங்கியகுறிப்புக்களையும் பின்பு தெரித்துக்காட்டுதும். அப்பாட்டு வருமாறு:—

---

*எம்மை என்றது தானுந் தன் றேவியுமாகிய விருவரையுங்குறித்துநின்றது. இதற்கு ஆயிழைகணவ என்றது துலக்கு. (நியோதகம்) நினைத்துவருவையோ வென்றது, அடிக்கடி எங்களைநினைத்து ஆசீர்வதித்திருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டபடி.

*

“ஆன்முலையறுத்தவறனிலோர்க்கு
மாணிழைமகளிர்கருச்சிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த்தப்பியகொடுமையோர்க்கும்
வழுவாய்மருங்கிற்கழுவாயுமுளவென
நிலம்புடைபெயர்வதாயினுமொருவன்
செய்திகொன்றோர்க்குய்தியில்லென
வறம்பாடிற்றேயாயிழைகணவ
காலையந்தியுமாலையந்தியும்
புறவுக்கருவன்னபுன்புலவரகின்
பாற்பெய்புன்கந்தேனொடுமயக்கிக்
குறுமுயற்கொழுஞ்சூடுகிழித்தவொக்கலோ
டிரத்திநீடியவகன்றலைமன்றத்துக்
கரப்பிலுள்ளமோடுவேண்டுமொழிபயிற்றி
யமலைக்கொழுஞ்சோறார்ந்தபாணர்க்
ககலாச்செல்வமுழுவதுஞ்செய்தோ
னெங்கோன்வளவன்வாழ்கவென்றுநின்
பீடுகெழுநோன்றாள்பாடேனாயிற்
படுபறியலனேபல்கதிர்ச்செல்வன்
யானோதஞ்சம்பெருமவிவ்வுலகத்துச்
சான்றோர்செய்தநன்றுண்டாயி
னிமயத்தீண்டியின்குரல்பயிற்றிக்
கொண்டன்மாமழைபொழிந்த
நுண்பஃறுளியினும்வாழியபலவே” (புறம்-செய்-௩௪.)
திணை - பாடாண்; துறை - இயன்மொழி*

இப்பாட்டினுட்பாராட்டப்பட்ட செய்நன்றிக்கு அடையாயுள்ள தொடர்களுள் “இரத்திநீடியவகன்றலைமன்றம்” என்று ஒருமன்றம் சொல்லப்பட்டிருக்கிறது. அது முன்கூறியவாறு நியாயசபை அல்லது ராஜசபையாயிருக்கவேண்டுமென்றுகொள்வோமாயின், பின் வரும் “கரப்பிலுள்ளமொடுவேண்டுமொழிபயிற்றி” என்பதற்கு வஞ்சனையில்லாத உள்ளத்தோடு உனக்கனுகூலமான நீதிமொழிகளைப்பயிற்றியெனப்

*இப்பாட்டின் துறை இயன்மொழி எனக் காட்டினமையால் இது புனைந்துரை வகையாற்பாடியதன்றென்பதும், வளவனதியல்பினை யுள்ளவாறுரைத்தசெய்யுளென்பதும் தெள்ளிதின்விளங்குவனவாம்.

பொருள்கொள்ளவேண்டும். கொள்ளவே அது தன்செப்பங்கூறுத லாகிய தற்புகழ்ச்சியின்பாற்பட்டுப் பெற்றபரிசையும் இதற்குக் கைமா றுக்கிக்காட்டலால் நன்றிபாராட்டுங்கூற்றொடு சேராததாகும். ஆதலால் இங்கு மன்றமென்றதற்கு நியாயசபை அல்லது ராஜசபையென்று பொருள்கொள்வது பொருந்தாது.

இனி "மன்றப்பலவின்" என்புழிப்போலப் பரிசின்மன்றமெனப் பொருள்கொள்வோமெனில், பாட்டு அல்லது கூத்துப்பயிற்றி யென் னுமையாலும்,வேறு சிறப்புக்குறிப்பில்லாமையாலும் முற்கூறியவாறே "கரப்பிலுள்ளமொடுவேண்டுமொழிபயிற்றி" என்பது தன்செப்பங் கூறிப் பரிசிலைக் கைமாறுக்குதலாலும் நன்றிபாராட்டிற் கிசையாமை யால் அதுவும் பொருந்துவதன்று.

பின்னை யாதெனில் "மொழிபயிற்றி" என்றமையால் அம்மன்றம், ஒரு கல்விச்சங்கமாயிருக்கவேண்டுமென்றும், தமிழ்நாட்டரசன்மாட் டுத் தமிழ்ப்புலவர்கூறுதலால் அது, தமிழ்ச்சங்கமாகவு மிருக்கவேண்டு மென்றுங் கொள்ளவேண்டும். பயிற்றி என்றமையால் அச்சங்கத்தைச் சார்ந்த ஒரு கலாசாலையில் அவர் இருந்திருக்கவேண்டுமென்றும் கொள்ளவேண்டும். கொள்ளவே, பயிற்றி என்பதற்கிசைய அக்கலா சாலையில் ஓராசிரியராயிருந்தனரெனக் கொள்வோமெனின், "கரப்பி லுள்ளமொடுவேண்டுமொழிபயிற்றி" என்பது முற்கூறியபடி நன்றி பாராட்டுடன் சேராததாகும். ஆதலால் நன்றிபாராட்டுதற்கிசையும்படி பயிற்றியென்பது "நட்பாடறேற்றுதவர்" (தேறுதவர்) என்புழிப்போல ஈண்டுப் பயின்று என்னும் தன்வினைப்பொருளுணர்த்திநின்றதெனக் கொள்வது சாலவும் பொருத்தமுடையதாகும். இப்பொருள் நன்றி பாராட்டற் குறிப்பாயிருப்பதுடன் "ஓக்கலொடு......பயிற்றி" என்ற உடனிகழ்ச்சிக்கும் பொருத்தமுடையதாயிருக்கிறது.

இங்குக் கரப்பிலுள்ளமோடு (பயின்று) என்றது கல்வியைச்சாக் கிட்டு அமலைக்கொழுஞ்சோறாரவிரும்பியேனும், நினதபிமானம்பெற விரும்பியேனும்வந் துன்னையடைந்தோமல்லோம்; உண்மையாகவே கல்வியொன்றையேபொருளாகக்கருதி யுன்னைவந்தடைந்த நாங்கள் அக்கல்வியைப்பெற்றதோடு, கரும்புதின்னக் கூலியும்பெற்றாற்போல் அமலைக்கொழுஞ்சோறு ஆரவும்பெற்றோம்; அதன்மேலும் பரிசிலும்

மங்களசூத்திரமுதலியசூத்திராபரணங்கள் சரீரபூஷணங்களாய்விளங்கு வதுபோல எனக்கும் கண்டஸ்த ஹ்ருதயஸ்தங்களாக நீதரிப்பித்த பிங்களசூத்திரமுதலிய சாஸ்திராபரணங்கள் ஆத்மபூஷணங்களாக விளங்குவதும் கண்கூடாகக்காணுயோ என்பதாம். இதுவும் வேண்டு மொழிபயிற்றி என்றதை யாதரிக்கிறது.

இக்குறிப்புணர்ந்தவளவன், நீ புலவர்குடிப்பிறந்தவியல்பானே பலவுங்கற்றனை; யானொன்றுஞ்செய்திலேன். என்றுனுக, ஆலத்தூர் கிழார், பிறவும் அவன்செய்தநன்றியின்பெருமைதோன்றக்கூறி நன்றி பாராட்டவேண்டி, முன்பு தாமுற்றவறுமையின்கடுமையைத் தாமுண் டிருந்த வுணவின்சிறுமையாற்கூறத்தொடங்கி, அவ்வுணவு தமக்குதவி யதுபற்றி, அதனையிகழாது வேதங்கூறியவாறேதெய்வமாகப்பாவித்து, அதன்மாட்டும் நன்றிபாராட்டிநின்று, அதனருமைகாட்டிப் பெருமைப் படுத்தி யுபசரித்துக்கூறுகின்றுர் புறவுக்கருவன்னவென்றுதொடங்கி.

புறவுக்கருவன்ன (வரகு) :—என்பது புருவினதுகருப்பையுட் செறிந்துகிடக்கும் முட்டைக்கருப்போன்ற நுண்ணிய (வரகரிசியை) என்பதாம். பருக்கையாயரித்துண்ணற்கும் அகப்படாதென்பது வறுமைக்குறிப்பு. அதுவும் புருக்கருப்போற்புசிக்கப்பட்டதென்பது அருமைக்குறிப்பு.*

புன்புலவரகு:—பிறதானியங்கள்விளையாத. புல்லிய உவர்நிலத்து விளைந்த வரகு. சாரமற்றதென்பது வறுமைக்குறிப்பு. நன்னிலத்தின் மாத்திரம்விளையும் பிறதானியங்கள்போலன்றிப் புன்னிலத்தும் விளைந் துதவியது என்பது அருமைக்குறிப்பு.

வரகு :— பிறதானியங்களெல்லாம் மடிந்துபோகநீண்டவற்கட† (க்ஷாம)காலத்தில் மடியாதுநின்று உணவாயிருந்தது இதுவொன்றே யென்றபொருட்குறிப்பு இங்கு இருதிறத்தினும் இசையுமாறுகாண்க.

---

*இன்னோரன்னகுறிப்புக்கள் ஈண்டுரைக்கவேண்டாவாயினும் முன்னும் பின்னுந் தொடர்புபற்றியும், அச்சங்கத்துப்பயின்றபுலவரதுசம்பாஷணமிருந்த படிகாட்டுதல்பற்றியும் இங்கு விரிக்கப்பட்டன.

†இவ்வற்கடம், களவியலுரைப்பாயிரங்கூறியதோடுபொருந்துமோவென ஆராயத்தக்கது.

பாற்பெய்புன்கம்:—பாலின்பரியாயமாகிய (பயஸ்) பயம் என்னும் பெயரால்வழங்கப்படும் தெண்ணீரிற் (சுத்தசலத்தில்) பெய்துகாய்ச்சிய கஞ்சியை. (தெண்ணீர்) பால் என்றதனாற் காடிநீருமில்லையென்பது வறுமைக்குறிப்பு. தெண்ணீர் பாலாகவேகருதப்பட்டதென்பது அருமைக்குறிப்பு.

தேனொடுமயக்கி என்றது சிறிது சுவைபெறவும் பசிதணியவும் வேண்டி வடிகட்டெளிவு (பதனியின்றெளிநீர்) கலந்து என்றபடி. இதனால், உப்பில்லாக்கஞ்சியென்பதுந் தேன்போற் சிறிதுகலந்தென் பதும் வறுமைக்குறிப்பு. அக்கள்ளும் தேன்போன்றிருந்ததென்பது அருமைக்குறிப்பு.

மயக்கி:—கலந்துண்டு. உண்ணுமளவின்சிறுமையால் உண்ணுமை யோடொக்கும் என்பதுதோன்ற உண்ணலைச்சொல்லாதுவிடுத்தது வறுமைக்குறிப்பு. அதுவும் (பாற்பெய்புன்கந்தேனொடுமயக்கி) பாய சத்திற்றேன்கலந்துண்பதுபோல் (சிறிது) உண்ணப்பட்டதென்பது அருமைக்குறிப்பு.

குறுமுயல்(கொழுஞ்சூடு):—காலுந் தோலும் வாலும் தலையும் முதலியபோக வெஞ்சியவிறைச்சி சிறிதேயென்பதும்,வளர்ப்புவிலங்கின் றசையில்லையென்பதும் வறுமைக்குறிப்பு. மிகவுமெல்லியதசையென் பது அருமைக்குறிப்பு.

கொழுஞ்சூடு:—கொழுந்தீயிற்சுட்டெடுத்த சூட்டிறைச்சி. பிறி தொருசம்பாரமுஞ்சேர்க்கப்பெறாததென்பது வறுமைக்குறிப்பு. அதுவே கொழுங்கறியாகக்கொள்ளப்பட்டதென்பதுஅருமைக்குறிப்பு.

கிழித்த:—பிய்த்துத்தின்ற. வயிறாரவுண்ணுமைதோன்றத் தின்றவென்னுது கிழித்த என உபசரித்தார்.

ஒக்கலோடு:—"ஒருவினையொடுச்சொல்லுயர்பின்வழித்தே" என் பதனாற் றன்னினுயர்ந்துள்ள சுற்றத்தார்வறுமை யிங்ஙனமாகத் தன் வறுமை கூறவேண்டாதாயிற்று. அதனானே யானுமெனக்கூறாது விடுத்தார். விடுத்தாராயினும் கிழித்தவொக்கலொடு யானும் என எச்சச்சொல் வருவித்துக்கூட்டுக.

ஒக்கலோடு:—(பயிற்றி) நாளொருவனேயன்றி யென்சுற்றத்தா ரெல்லாம் கல்விபயிலும்படி உன்னாலுபகரிக்கப்பெற்றோரென்கிறார். இதனால், உயர்தரக்கல்வியை நிலைநிறுத்தக்கருதி அதுபயிலுதற்குரிய புலவர்குடிப்பிறந்தார்பலரும் கூட்டங்கூட்டமா யூட்டுப்பெற்றிருந்து முத்தமிழ்க்கல்வியும்பயிலுமாறு சில கல்லூரிசிறுவியிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

இரத்திநீடிய அகன்றலைமன்றம்:—இலந்தைமரம்வளர்ந்த பரந்த இடத்தையுடையமன்றம் என இம்மன்றத்தை விசேடித்தமையால் இதுபோலும் வேறுபலமன்றங்கள் அங்கிருந்தனவென்பது பெறப்படும். பெறவே, அவை ஒவ்வொன்றும் வழங்குதற்பொருட்டு வெவ்வேறு பெயர்பெற்றிருக்கவேண்டுமென்பதும்,இம்மன்றத்துக்கும் ஒருபெயரிட்டிருக்கவேண்டுமென்பதும் உணரத்தக்கன. அப்பெயர் யாதாயிருக்குமென்றாராயின், வடநாட்டுள்ள மதுரை, காசி என்னும் ஊர்ப்பெயர்களைப் பெருமையுந் தூய்மையும்பற்றித் தென்னாட்டுண்டான விரண்டூர்களுக்குத் தென்மதுரை, தென்காசியெனவைத்துவழங்குதல்போல வடநாட்டுள்ள பதரிகாச்சிரமம்* என்னும் பொதியிலின்பெயரைக் கல்வியறிவொழுக்கங்களைவளர்க்கு மொப்புமைபற்றி இம்மன்றப்பொதியிலுக்கும் தெக்ஷிணபதரிகாச்சிரமம்; அல்லது தென்னிலந்தைமன்றம்; அல்லது இலந்தைமன்றம் எனவைத்து வழங்கிவந்திருக்கவேண்டுமென்றும், அதற்கு நிரூபகமாகவே இம்மன்றப்பொதியிலின்முன்றிலிலிலந்தைமரங்கள்வைத்து வளர்க்கப்பட்டிருந்தனவென்றுந் தோன்றுகின்றது.

அகன்றலைமன்றம்:—பரந்த இடத்தையுடையமன்றம். இதனால் இப்பொதியில் ஆங்காங்குப் பலவகைப்புலவரு மொருங்குகூடுதற்கேற்ற மண்டபங்களும், அவர்தங்க வுறையுளும், வேண்டுமொழிபயிலுதற்கிசைந்த பல கலாசாலைகளும், கற்கும்மாணவர்க் குறையுளும், அவரவர் வருணவொழுக்கத்துக்கிழுக்கின்றி யமலைக்கொழுஞ்சோறருமாறமைக்கப்பட்ட வெவ்வேறூட்டுப்புரைகளும், அவற்றிற்குவேண்டும்பொருள்களைப் படைத்துவைத்துதவும் பண்டசாலைகளும், ஜலாதாரங்களுமுடையதாய்ச் சுகாதாரத்துக்குவேண்டுஞ் சோலையும்,வெள்ளிடையுஞ் சூழ்ந் திடமகன்றிருந்ததென்பது பெறப்படுகிறது.

---

*ஆச்சிரமம் பொதியிலோடொத்ததென்பதற்கு அகஸ்தியாச்சிரமம் பொதியில் என்னும்பெயரால்வழங்குவது சான்றாகும்.

பயிற்றி:—பலகாலுஞ்சொல்லி. (அதாவது கற்றற்குரியநூல்களைச் சந்தை திருவைசொல்லிச்சிந்தித்துக் கண்டஸ்த ஹ்ருதயஸ்தங்களாக்கிக் கொண்டுஎன்றபடி) இது அம்மன்றத்துக் கல்விபயிலுமுறையைக்காட்டி "ஆயிழைகணவ" என்றதிற்காட்டிய குறிப்பின்பகுதியை யாதரிக்கிறது. இனிப் பயிற்றி என்பதற்குக் கற்பித்து எனப் பிறவினையாகவேகொண்டு பொருளுரைப்பினு மிழுக்கின்றாம்; என்னை? "குறுமுயற்கொழுஞ்சூடு கிழித்தவொக்கலொடு,அமலைக்கொழுஞ்சோறார்ந்தபாணர்க்குக், கரப்பிலுள்ளமொடுவேண்டுமொழிபயிற்றி, அகலாச்செல்வமுழுவதுஞ்செய்தோன்" என அடிமாற்றிக்கூட்டிப் பிறவினையாகவேகொண்டு பொருளுரைப்பினும் அமையுமாறுகாண்க. இங்குப்பாணராகிய எம் பொருட்டுப் பயிற்றுதற்றொழிலைச்செய்து, அகலாச்செல்வமுழுவதுஞ் செய்தோன் எனக் குவ்வுருபுக்குப் பொருந்துமாறு பொருளுரைத்துக் கொள்க. இப்பொருளுக்கிசையக் "கரப்பிலுள்ளமொடு" என்பதற்கு (வளவன்)தன்னயங்கருதாது என்று பொருள்கூறிப் பயிற்றற்றொழிலுக் கடையாக்குக. இம்முடிபிற் கிழித்தவொக்கலொடு யானுமார்ந்த பாணர்க்குப் பயிற்றிச் செய்தவெனக்கூட்டிப் பொருளுரைக்க. முன் முடிபிற் கிழித்தவொக்கலொடு யானும் பயிற்றி ஆர்ந்தபாணர்க்கெனக் கூட்டிப் பாணராகிய எமக்கெனப் பொருளுரைக்க.

பயிற்றி, அமலைக்கொழுஞ்சோறார்ந்தபாணர்க்கு :— முன்பு, பயிலாமையின்வேற்றுமைதோன்றப் பயிற்றி என்றும், தாம்பருகிவந்த கஞ்சியின்வேற்றுமைதோன்ற அமலை(கட்டிச்சோறு)என்றும், வரகின் சோற்றின்வேற்றுமைதோன்றக் கொழுஞ்சோறென்றும், வயிறாரவுண்ணாதிருந்தமையின்வேற்றுமைதோன்ற ஆர்ந்த(வயிறாரவுண்ட) என்றும், பாடத்தெரியாதிருந்தமையின்வேற்றுமைதோன்றப் பாணர்க்கென்றும் கூறப்பட்டன.

பாணர்க்கு:—சாதிதருமமாகவே பாடுதற்றொழிலைமேற்கொண்ட குடியிற்பிறந்த என்சுற்றத்தார்க்கும் எனக்கும். இங்குப் பாடுதலைச் சாதிதருமமாகக்கொண்டமையால் அதற்குப் பரிசில் கைமாறாகாதென்பதும், அது நன்றியின்மேல் நன்றியின்மேல் நன்றியாகிய மூன்றுமுறைநன்றியாம் என்பதும் குறிப்பு.

அகலாச்செல்வம்—நீங்காதசெல்வம். அதாவது குடிவாழ்க்கைக் குடனுறைவதாகி யின்றியமையாதசெல்வம் என்றபடி.

முழுவதும்செய்தோன் — ஒன்றுனுங்குறைவின்றியிருக்கச்செய் தோன். இதனுற் குடிவாழ்க்கைக்குவேண்டும்பொருள்தேடுதற்குரிய காளைப்பருவத்தில் அதனைத்தேடா துலகநன்மையைநாடிப் பெருங்கல்வி பயின்றும் பின்பு பயிற்றியுங் காலங்கழிப்பார்க்கு, அவர்குடிவாழ்க்கைக்கு வேண்டும்பொரு ளொன்றுங்குறைவின்றியுதவிக் குடும்பக்கவலையற வைத்தாலன்றி யக்கல்வி நிலையாதேன்பதுணர்ந்து அங்ஙனஞ்செய்தா னெனத்தோன்றுகின்றது.

எங்கோன் என்பதற்குப் புலவர்கூட்டமாகிய எங்களுக்கிறைவன் என்பது பொருளாகிறது. இதனுல், வளவன் இலங்கைமன்றம் என்னுந் தமிழ்ச்சங்கத்தின்றலைமைவகித்திருந்தவனென்பதும், ஆலத்தூர்கிழார் அச்சங்கத்தினருளொருவரென்பதும் வெளியாகின்றன. இப்பொருட் கிசைய வளவனும் கல்விச்சங்கத்தலைமைவகித்தற்குரிய கல்வித்திற மையுமுடையானேன்பதைச் சிறுகுடிகிழான்பண்ணன்மே லவன்பாடிய புறப்பாட்டாலும் அறியலாம்.

வளவன்:—பொருட்செல்வத்தானும்மிக்க சோழன். இதனுல் அச்சங்கத்தை மிக்கசெல்வப்பொருள்படைத்துச் சிறப்பித்திருந்தன னென்பது கருத்து. ஆதலால் "எங்கோன்வளவன்" என்றது கல்வியால் ஆத்மபுஷ்டியையும் செல்வத்தாற் சரீரபுஷ்டியையும் புலவர்க்குதவியவ னென நன்றிபாராட்டியவாறுயிற்று.

வாழ்கவென்று:—வாழுக்கடவனென்று.

நின், பீடுகெழுநோன்றுள்பாடேனுயின்:—பெருமைபொருந்திய தவவொழுக்கம்போன்ற நினதுதாளாண்மையைப் பாடாதிருப்பேனு யின், நன்றிகொன்றேனுவேன் என்பது குறிப்பெச்சம். இவ்வா றுலக நன்மைநாடித் தமிழ்ச்சங்கம்நாட்டி, உயர்தரக்கல்வியூட்டி யுலகளித்து வருமுயற்சியே பெருமைபொருந்திய(நிஷ்காம)தவவொழுக்கம்போன்ற தாளாண்மையென நன்குமதிக்கப்படுவதென்பதும் இங்குநோக்கத்தக் கது.

இங்ஙனம் உன்னைக் காலையு மாலையும் பாடியிரேனுயின் நன்றி கொன்றேனுவேனென்றபுலவரைநோக்கி வளவனும், நீ சொல்லிய வெல்லாம் உலகோம்புங்குடிப்பிறந்தார்தமக்குரியசாதிதருமமாதலால் என்குறைதீரச்செய்திருந்தேனேயன்றி, உனக்கென்று ஒன்றுஞ் செய்தேனல்லேன்; ஆதலால் என்னைநினைத்துவரவேண்டிக்கொண்டேன் என்ன, அதுதன்னையும் புலவர் மேற்கொண்டுகளைவாராகிப்"படுபறிய லனேபல்கதிர்ச்செல்வன்" என்கிருர்.

பல்கதிர்ச்செல்வன்படுபறியலன்:-(நீ செய்தநன்றியைநினைந்தன்றி யும் ஒருவன் உன்னை நினையாதிருப்பானாயின்) பல்லாயிரங் கிரணங்களை யுடைய கதிரோன்றோற்றமுங் காணாதிருப்பானாவன். கதிரோன் றோற்றங் காணாதிருக்க இயலாதவ்வாறுபோல உனதுகீர்த்திப்பிரபாவம் ஒருவரானுங் கருதாதிருக்கவியலாதென்பது கருத்து.

அதுகேட்டவளவன் யான் அதுவேண்டிநின்றேனல்லேன், அடிக் கடிநினைத் தெம்மை யாசிர்வதித்திருக்கவேண்டினேனென்ன, புலவர், யான் (தஞ்சம்)மிகவுமெளியேனாதலால் அதுவுஞ்செய்தற்குரியேனல்லே னென்ன, வளவன் பின்னையாவருளரென்ன, புலவர் அதுசெய்தற்குரியர் சான்றோரென்ன, வளவன், நின்னினுஞ்சான்றோரை யான்கண்டிலேன், நீ காணவல்லையாகில் அவரைக்கொண்டுஞ் செய்விப்பியென்ன, புலவர், (பெரும)ஒன்றானுங்குறைவில்லாவுனக்கவரானுஞ்செய்யக்கடவதின்றே யென்ன, வளவன் இனியொருகுறைவாராதிருக்கவேண்டியேனும் அது செய்யற்பாற்றேயென்ன, புலவர் உன்குறை சான்றோர்குறையாமாத லால் அதுவாராமைப்பொருட்டு அவர் செய்தநன்மையுண்டாகை யால் ஒருகுறையுமின்றி நீடூழிவாழ்வாயாக(வென்றார்)என்பது எஞ்சிய தொடர்களின் கருத்தாகக்கொள்க.

இப்பாட்டிற்காட்டிய குறிப்புக்களிற்பலவுங் கல்விச்சங்கத்துக்குரிய அங்கங்களை நன்குவிளக்கிச் சோழராஜதானியில் இலங்கைமன்றமென் றொரு தமிழ்ச்சங்கமிருந்ததென்பதை யுணர்த்துமாறுகாண்க.

பண்டைக்காலத்து லௌகிககாரியநிர்வாகசங்கங்களுக்குப்பெய ராய்வழங்கப்பட்டுவந்த மன்றமென்னுஞ்சொல் பின்பு காலகதியால் கூட்டங்கூடுமொப்புமைபற்றி,(இக்காலத்துக் கச்சேரியென்னுஞ்சொல் பாட்டுக்கச்சேரி, சீட்டுக்கச்சேரி என வழங்கப்படுவதுபோல)கூத்தாட ரங்கம், சுடலைத்தோப்பு, சாறுயச்சாவடிமுதலிய பலர்கூடுமிடங்களுக் கெல்லாம் பெயராய்வழங்கப்பட்டமையால் அதனாற்றல்குறைந்தது பற்றி, சமயநடை ஒழுக்கநடைகளைக்கற்பித்துத் தன்னிலையில்நிறுத்தி வந்தசபைகளைப் புத்தசமயத்தார் சங்கமென்னும்பெயரால்வழங்கியது கொண்டு மற்றவித்வத்ஸபைகளும் சங்கமென்னும்பெயரால் வழங்கத் தலைப்பட்டன.

ஆதலாற் சங்கமென்னும்பெயரே தமிழ்மொழியில்லாமையால், தமிழ்நாட்டில் முன்பு தமிழ்ச்சங்கங்களில்லையென்பது பொருந்தாதென வுணர்க.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

இலங்கைமஹாவம்சமும், தென்னிந்திய சரித்திரவாராய்ச்சியும்.

"செந்தமிழ்" (தொகுதி கஉ பகுதி கஉ-ல்) சஅச-ம்பக்கத் தொடர்ச்சி.

நாம் இதுகாறுங்கூறிய இவ்விதிஹாஸங்களிலடங்கியவிவரங்களில் வெளிப்பட்டஉறுதிப்பாட்டினின்றும், இவைகள் முழுதும்நம்பத்தகாதவைகளல்லவென்றும் பரிசோதிக்கத்தக்கவைகளேயென்றும் நன்கு விளங்கும். ஆனால் அவைகள் முழுதும்பிழையற்றனவென்றுகொள்ள முடியாது. இவைகளிலடங்கியசெய்திகள் நிகழ்ந்தகாலத்திற்கும் வர்ணனைபெறுங்காலத்துக்கும் நடுப்பட்டஅவதி யதிகரிக்கவதிகரிக்கப் பிழைகள்கலந்துவழங்குவது சாத்தியமென்றும், கற்பனைக்கதைகள்கலக்கப்படுவது அதிகமென்றுங் கொள்ளவேண்டும்.

இப்பொதுநோக்கம் முக்கியமாய் விஜயன்வரவுக்கும் அவனுக்காருந்தலைமுறையவனான தேவானும்பியதிஸ்ஸனுடைய ஆட்சிக்கும் நடுப்பட்டுக்கிடக்கும் பழையகாலத்துக்கு மிகவும் ஒத்ததாயிருக்கின்றது. இக்காலத்தியசெய்திகளில் ஸந்தேகிக்கத்தக்கவிஷயங்களில் முதலது விஜயன் இலங்கைத்தீவுசேர்ந்ததினம் பௌத்தர்நிர்வாணதசையையடைந்ததினமென்பது. தவிர இக்காலத்திய அரசர்களின் ஆட்சிக்காலங்களெல்லாம் முழுவருஷங்களாகவே வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிற் கடைசியான பாண்டுகாபய முடசிவர்களின் ஆட்சிக்காலமோவென்றால் அஸாத்தியமான அளவினதாய்நிற்கின்றது. இவ்விருவரில் முதல்வனாய பாண்டுகாபயன் முப்பத்தேழாம்வயதிற் சிங்காதனமேறி எழுபதுவருஷம் ஆண்டானும். அப்படியாயின் இவன்ஆயுட்காலம் நூற்றேழுவருஷமாகின்றது. இவனுக்குப்பின்வந்தோனான இவன்மகன், இவ னரசுரிமைக்குவருமுன்மணந்தவளிடம் பிறந்தோன். இவன், தந்தையிறந்தகாலத்தில் வயதுசென்றவனாயிருந்திருத்தல்வேண்டும். ஆயினும் இவனுக்கு அறுபதுவருஷம் ஆட்சிக்காலம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முரண்படுங்கூற்றுக்களைவிளக்க வழியொன்றுதான் உள்ளது. அதாவது இவ்விதிஹாஸங்களையியற்றியோர், விஜயன் வரவும் பௌத்தநிர்வாணமும் ஓரேசமயத்தில்நேர்ந்ததாகக் காலவரை

யறையையெழுதியோராவரென்பதாம். ஏனெனில், இக்கதைகளியற்றிய காலத்தில் இவ்வொற்றுமை யொருவாறு நம்பப்பெற்றதாயிருந்தது போலும். ஆகையா லிவ்விருவராட்சிக்காலத்திலே அறுபது அல்லது எழுபதுவருஷத்தியகாலவழுவுக்கு இடமுண்டு. ஆயினும், இக்காலத்து வரலாறுகளெல்லாம் நம்பவொண்ணாதனவேயென்றுகொள்ள லவசிய மில்லை. ஏனெனில், பாண்டுகாபயன் நடத்திய போர்ச்செய்திவர்ணனை சிறிதும் கற்பனையாகத்தோன்றுவதில்லை. இதற்குப் பிற்பட்டகாலத் திலுங்கூட இம்மாதிரியாகவே இடைவெளிகள் நிரப்பப்பெற்றதென்று சொல்லத் தெளிவானசான்றுகள்தோன்றும். இதற்குதாரணமாக இவனுக்கடுத்த ஆறு அரசர்களின் ஆட்சியளவையெடுத்துநோக்கின், ஒருதகப்பன், நான்குமக்கள், இரண்டுராஜ்யாபகாரியரசர்கள், இவர்க ளாண்டகாலம் தொண்ணூற்றிரண்டுவருஷங்களாகின்றன. என்றால் இரண்டுதலைமுறையார்க்குத் தொண்ணூற்றிரண்டுவருஷகாலம்வகுத்த தாயிற்று. துஷ்டகாமணியின் ஆட்சிக்காலம்வந்தவுடன் ஆட்சிக்கால வரையறை நம்பத்தக்கதாயும், இயல்பாயிருப்பதாயும் ஏற்படுகின்றது. ஆனால் நம்பவொண்ணாததாய் எல்லையிடப்பட்ட மேற்கூறியகாலநியதி யிலுங்கூடத் தேவானம்பியதிஸ்ஸனுடைய ஆட்சியும், மாஹிந்தனுடைய வரவும் ஐயத்துக்குக்காரணமான முன்பின்காலங்களினின்றும் தனிப் பட்டு வியக்தமாய்நிலைபெறுகின்றன. இலங்காதீவத்திருந்த பௌத்த ஸந்யாசிகளால் இத்தீவத் திதிஹாஸங்களிற் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குத் தொடக்கம் பௌத்தர்நிர்வாணமடைந்தவருஷம். இச்செய்திவிஷயமானகதைக்குப் பௌத்தக்குழுவின்வளர்ச்சிக்கு எவ் வளவு சாதனங்களாக ஏற்பட்டனவோ அவ்வளவுமட்டுந்தான் சாதா ரணமானவிளைவுகளும், சரித்திரஸம்பந்திகளான பாத்திரங்களும் முக்கியமானவை. ஆயினும் மிகவும் பிராசீனமானகாலத்திலுங்கூடப் பௌத்தநிர்வாணகாலத்தினின்றுஞ் சென்றகாலத்தைக்குறிப்பிட்டுக் காட்டுஞ் சிலதனிமையானவிளைவுகளுடன் சிறப்புவாய்ந்தமஹான்களுங் காணக்கிடைக்கிறார்கள். இவைகளுக்கு இடையிடையேகிடக்கும் வெளிகளைநிரப்பக் கட்டுக்கதைகளேற்படுவதியல்பே. இம்மாதிரியாகவே தான் இலங்காதீபத்திய சரித்திரகாலவரையறையேற்பாடு மமைந்து அர்த்தகதையினின்றும் எடுத்தாளப்பட்டிருக்கவேண்டுமென்பது சரியான ஊகமாய்த்தோன்றுகிறது.

மிகப்பூர்வகாலத்தினின்றுநிலைபெற்று, இக்காலவரையமறையேற் பாட்டுக்கு மிகவும்இன்றியமையாதஆதாரமாய்நிற்கும்வருஷம் பௌத்த நிர்வாணத்துக்குப்பின் இருநூற்றுப்பதினெட்டாவதும், அசோகமஹா ராஜாவுக்குப் பட்டாபிஷேகமானதுமானவருஷமொன்றேயாம். இச் செய்தி அசோகன்ஆட்சிபெற்று நான்குவருஷத்துக்குப்பிறகு நிகழ்ந்த தென்ப. அப்படியாயின் பௌத்தநிர்வாணத்துக்குப்பின் இருநூற்றுப் பதினாலாம்வருஷம் அசோகன் அரசுரிமைபெற்றதாகும். இதினின்றும் இவன்தகப்பன் பிந்துஸாரனாட்சியளவு இருபத்தெட்டுவருஷத்தையும், பாட்டன் சந்திரகுப்தனாட்சியளவு இருபத்துநான்குவருஷத்தையும் கழிக்கச் சந்திரகுப்தன் அரசுரிமைபெற்றகாலம் பௌத்தர்நிர்வாண மடைந்து 162-வருஷத்துக்குப்பின்னென்று விளங்கும். இச்செய்தி, அதாவது சந்திரகுப்தன் ஆட்சிபெற்றது, கி. மு. 321-ம்வருஷமென்று சாதாரணமா யங்கீகரிக்கப்பட்டதாகவிருக்கிறது. இதினின்றும் பௌத்தநிர்வாணகாலம் கி. மு. 321+162 அல்லது 483 என்று ஏற் படும். இவ்விரண்டுவருஷங்களும் உறுதியாக உண்மையானவையென்று சொல்லத்தகாதனவாயினும், இவ்விரண்டில் அசோகமஹாராஜாவின் அபிஷேகம் பௌத்தநிர்வாணத்துக்கு 218 - வருஷஞ்சென்றபின் என்பது அவ்வளவு ஐயப்படத்தக்கதன்று. ஏனெனில் இவ்விரண்டு நூற்றாண்டளவு இம்மாதிரியான கர்ணபரம்பரை உண்மையினின்றுந் தவறுதிருந்திருத்தல் அசாத்தியமன்று. சந்திரகுப்தன் ஆட்சிபெற்ற வருஷமோவென்றாற் சிலவருஷங்கள் முன்பின்னுகலாம். ஆனால் இது மிகவுஞ் சிறியகாலமாய்த்தான் இருத்தல்வேண்டும். இவ்விருவரதாட் சிக்காலத்தைப்பற்றியோவென்றால், சந்திரகுப்தனது 24 - வருஷம் என்பது கர்ணபரம்பரைகளால் நிச்சயமாம்.

பிந்துஸாரனாட்சிக்காலம் மூன்றுவருஷம் முன்பின்னுகலாம். இச் சிறுபிழைகளும் வித்தியாஸங்களும் புலப்பட்டபோதிலும் பௌத்தநிர் வாணத்தைப்பற்றி யேறக்குறைய ஒருவாறான ஒற்றுமைக்கொள்கை வந்துகொண்டிருக்கிறது.*

---

*இது கி. மு. 483 என்பது ஐரோப்பியர்கள் அங்கீகரிப்பது. மகா-ா-ா-ஸ்ரீ L. D. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் ஜோதிஷகணிதப்பிரகாரம் கி. மு. 477 என்பர்.

பௌத்தர்நிர்வாணமடைந்ததாய்ச்சொல்லப்படுகிற ஒவ்வொரு வருஷத்தையும் இங்கு ஆராயப்புகுவது அவசியமில்லை. இச்சந்தர்ப்பத்திற் கவனிக்கவேண்டியது பர்மா, சீயம், இலங்கைமுதலிய இடங்களில் எடுத்தாளப்படும் கி. மு. 544 ஒன்றே. இது தவறென்றும், இதிற் சற்றேறக்குறைய அறுபதுவருஷம் பிழைபட்டிருக்கிறதென்றும் சாமானியமாய் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். தவிர பளீட் என்பவர் எடுத்துக்காட்டியபடி இது தொன்றுதொட்டு இடைவிடாமற் பரம்பரையாய்வழங்கிவந்ததுமன்று. இது பிற்காலத்தியகற்பனையாய் கி. பி. பதினோராநூற்றாண்டில் ஏற்பட்டது. ஆய்ந்துநோக்குங்கால் கி. பி. பதினோராநூற்றாண்டின்முற்பட்டகாலத்தில், தொன்றுதொட்டு வழங்கிவந்த பௌத்தசகம் ஒன்று கி. மு. 483-ல் தொடங்கியதென்பதற்குவேண்டிய சூசனைகளநேகம் காணக்கிடைக்கின்றன. கி. மு. 544-ல் தொடங்கும் இச்சகமோவென்றால் கி. பி. பதினொன்றாநூற்றாண்டுக்குமுன் ஆட்சியிலில்லாமல், இந்நூற்றாண்டின் இடையில் ஆரம்பித்து இன்னும் நடைபெறுகிறதுபோலும்.

இவ்விஷயத்தைச் சோதிக்கப்புகுமுன் பராக்கிரமபாஹுமுதல், இவர்க்குமுன் மூன்றாம்உதையன்வரைக்கும் ஆண்டவர்களின் ஆட்சிக்காலவரையறை ஏற்படல்வேண்டும். பராக்கிரமபாஹுபட்டாபிஷேகம் பௌத்தநிர்வாணத்துக்கு 1696-வருஷத்துக்குப்பின்னென்பது (அதாவது 1697-ம் வருஷத்தில் என்பது) கல்வெட்டுக்களினின்றும் ஏற்பட்டு, பிறகாப்பியச்சாதனங்களாற் பூர்த்தியடைந்து உறுதிபெறுகிறது. இதற்கு எட்டுவருஷத்துக்குப்பின் அதாவது பௌத்தவருஷம் 1705ல் இரண்டாம் அபிஷேகம் என்பது புலப்படுகிறது. இதினின்றும் நான்காம்வருஷம் (பௌத்தநிர்வாணத்துக்குப்பின் 1708-வருஷமாய் 1709-ம் வருஷத்தில்) இவ்வரசர்பெருமான் ஒருபௌத்தஸங்கத்தைத் தாபித்தனராம். இலங்காசகப்பிரகாரம் இவ்வருஷங்கள் கி. பி. 1153, 1161, 1165, ஆகின்றன. பராக்கிரமபாஹுவுக்கு, இக்காலம், தென்னிந்தியாவில் ஆற்பாக்கத்தில், திருவாலீச்வரர்கோயிலிற்கண்ட கல்வெட்டொன்றினால் உறுதியடைகிறது. ஆகையால் கி.பி. பன்னிரண்டாநூற்றாண்டின்பிற்பாதியில், கி. மு. 544-ல் தொடங்கும் பௌத்தசகம் ஆளப்பட்டதென்பது திண்ணம்.

சூளவம்சப்பிரகாரம் இவற்குமுற்பட்ட ஆறரசர்கள், (அதாவது பராக்கிரமபாண்டுவினின்றும் விஜயஸிம்மமுதலியார்பட்டி 1-1-ம் அரசன் பராக்கிரமபாஹுவரைக்கும்) 107-வருஷம் ஆண்டவர்கள். பராக்கிரமபாண்டு பட்டம்பெற்றது பௌத்தசகம் 1590, என்றால் அது இலங்கைச்சகப்படி கி. பி. 1046-ஆம். இது இதேவருஷத்திய மணிமங்கலம் கல்வெட்டால் வலியுறும். எப்படியென்றால் இக்கல்வெட்டின்படி இப்பராக்கிரமபாண்டு முதல்ராஜாதிராஜனென்னும் சோழவரசனாற் றோல்வியடைந்து, உயிரிழந்தான். இவனுக் கிரண்டுவருஷம் ஆட்சிக்காலமென்று சூளவம்சத்தினின்றும் தோன்றும். இவ்வரசன் ஒருவருஷத்தில் ஆளத்தொடங்கி மறுவருஷத்தில் இறந்து இவ்விருவருஷபாகமும் கி. பி. 1046-ல் அடங்கியிருத்தல்கூடும். இதினின்றும் இலங்கைச்சகம் கி. பி. பதினோராநூற்றாண்டினிடையில் நடைபெற்றதென்பது வெள்ளிடைமலை.

இதைவிட்டு மூன்றாம்உதையனைநோக்கின்(விஜயஸிம்...பட்டி.111) இவன்விஷயமான தென்னிந்தியகல்வெட்டொன்று இச்சகக்கணக்கை வேறுவிதமாகத்திருப்பிவிடும். சூளவம்சப்பிரகாரம் இவ்வுதையனுக்கும் பராக்கிரமபாண்டுவுக்கும் இடைப்பட்டகாலம் 93-வருஷம் 8-நாளாகும். பராக்கிரமபாண்டு சிங்காதனமேறியது கி. பி. 1046-ம் வருஷமென்று மேற்கூறியுள்ளோம். ஆகையால் உதையன் அரசுரிமையடைந்தகாலம் பௌத்தசகம் 1497 அல்லது கி. பி. 953 ஆனால், தஞ்சாவூர்க்கல்வெட்டொன்றின்பிரகாரம் உதையன் ஆட்சி பெற்றது கி. பி. 1015-ற்போலும்.

இக்கல்வெட்டு இலங்கையின்மேற்செலுத்திய யுத்தயாத்திரையொன்றை விவரிப்பது. இதன்விவரம் சூளவம்சத்தில் (53. 40) உதையன் ஆட்சியாரம்பத்தில்விளைந்ததாய்வர்ணிக்கப்பெற்ற படையெடுப்போடு ஒற்றுமைப்படுவதாயிருக்கிறது. கீல்ஹாரன் கணனைப்பிரகாரம் இச்சோழன் ஆட்சிபெற்றது கி. பி. 1011 முடிவுக்கும் 1012-ன் நடுவுக்கும் உட்பட்டகாலத்திலாம். இப்போர்ச்செலவு இச்சோழனுடைய (அதாவது கங்கைகொண்டசோழனுடைய) நான்காம் வருஷத்துக்கும் ஆறாம்வருஷத்துக்கும் இடைப்பட்டது; என்றால் கி.பி. 1015-க்கும், 1018-க்கும் இடைப்பட்டதாம். ஆகையாற் பௌத்தசக 1497, 1498-ம் வருஷங்கள் இதற்குட்படவேண்டும். இவ்விரண்டிலும் முன்வருஷத்தையே யெடுத்துக்கொண்டாற் பௌத்தநிர்வாணகாலம் 1497-ல் 1015-க்கழிக்க எஞ்சிய கி. மு. 482-ம்வருஷம் அல்லது 483-ம் வருஷமாம்.

ஆகையால் விக்கிரமஸிங்கரபிப்பிராயப்படி நாம் கொள்ளவேண்டியது என்னவென்றால், சூளவம்சம் எழுதியவர்களில் உதையன்முதற் பராக்கிரமபாகுகாலம்வரைக்குமுள்ளபாகத்தை எழுதியவர், கி. மு. 544-ல் தொடங்கும் சகம் ஆட்சிபெற்றகாலத்தில் வதிந்தவரென்பதும், உதயன், பராக்கிரமபாண்டு, பராக்கிரமபாஹு இவர்கள் முறையே பட்டம்பெற்ற பௌத்தசக 1497, 1590, 1693, என்னும் இம்மூன்று நிலைபெற்றவருஷங்களைத் தெரிந்தாண்டவரென்பதும், ஆனால் இதில் முதல்வருஷம் பின்னிரண்டினின்றும் விலகி கி. மு. 483-ல் தொடங்கிய மாறுபட்டசகமொன்றற்குச்சேர்ந்ததென்பதுமாம். இவரபிப்பிராயப்படி உதையனுக்கும் பராக்கிரம்பாண்டுவுக்கும் நடுப்பட்டகாலம் 93-வருஷமாயினும் உண்மையா யிக்காலவளவு (1046-1015) வருஷம் முப்பத்தொன்றேயாம்.

இக்காலத்தியசெய்திகளையெல்லாம் சூளவம்சம் மிகவும் விவரமாய் வர்ணித்திருப்பதால் மேற்காட்டியமாதிரி யதிகப்படியாய்த்தோன்றும் 62-வருஷங்களை எங்கிருந்துநீக்கவேண்டுமென்றுதீர்மானிப்பதுகஷ்டம். ஆயினும், கைகராசிரியர் இவ்வறுபத்திரண்டுவருஷத்திற் பெரும்பாகத்தை ஐந்தாம்மாஹிந்தன் ஆட்சிக்காலத்தினின்றும், அதற்கடுத்ததான அநாயககாலத்தினின்றும் தள்ளல் நலமென்பர். இவ்விருகாலத்தையும் ஒன்றுகச்சேர்த்தால் 48-வருஷங்கள்தான் ஆகின்றன.

இவ்வாராய்ச்சியால், இவ்விலங்காதீவத்தின் இதிஹாஸங்களில் ஒருபாகமும் பொய்யேயென்றுசொல்லவொண்ணுவென்பதும், இவைகளின் முற்பாகத்தியகாலவரையறையுங்கூடச் சரித்திரநோக்கத்தில் அங்கீகரிக்கத்தகாதவளவு பிழைப்பட்டதல்லவென்பதும் தெளிவாகின்றன. கைகராசிரியருடையபலவகையாராய்ச்சிகளெல்லாம் இன்பம் பயந்து புத்திக்குப் புதிதானவிஷயத்தைப் புகட்டுவனவேயாயினும் இத் தென்னிந்தியசரித்திர காலஒற்றுப்பாட்டுக்குச் சம்பந்தப்படாததால் அவைகளை யிங்குவிடுத்துள்ளோம்.

(தொடரும்.)

எஸ். கிருஷ்ணஸாமிஐயங்கார், எம். ஏ.

---

* நூலாராய்ச்சிமுறை—ஆங்கிலமும் தமிழும்.

:O:

"ஆவியந்தென்றல்வெற்பினகத்தியன்விரும்புந்தென்பால்
நாவலந்தீவம்போற்றிநாவலந்தீவந்தன்னுண்
மூவர்கட்கரியானிற்பமுத்தமிழ்ச்சங்கத்தெய்வப்
பாவுலர்வீற்றிருக்கும்பாண்டிநன்னாடுபோற்றி"

அமிழ்தினுமினிய தமிழ்மடவால்செய் யருந்தவத்தின்பயனே யென்னும்படிதோன்றி நெடுநாளாகப் படிப்போருங் கேட்போரு மற்று ஏட்டுப்பிரதிகளிற்கிடந்த சிறந்த பழங்காப்பியங்களை யாவருங் களிப்புடன்கற்கும்படி உரை, அபிதானவிளக்கம், ஆராய்ச்சிவிளக்கம், மேற்கோளகராதிமுதலிய மிக்க உபயோகமான ஆராய்ச்சிக்குறிப்புக் களுடன் பதிப்பித்துத்தந்தவர்களும், நூலாராய்ச்சியிலும் கல்வியி லும் மேம்பட்டும் நற்குணநற்செய்கைகளாற் றிகழ்வுற்றும், புலவர் திலகமாகவீற்றிருக்கும் மகாஉபகாரியாகிற மஹாமஹோபாத்தியாய பிரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்முன்பாகவும், இன்னும் அநேகபண்டிதர்கள்முன்பாகவும், 'உரைப்பார்வாயுரைப்பவை தம் புகழேயாம்படி யுயர்ந்து' அரியபெரியகாரியங்களையெல்லாம் மிகத் திருத்தமாகச்செய்தும் பாஷாபிவிருத்தியில், தமது முழுக்கவனத் தைச்செலுத்தியும் புகழ்பெற்ற 'குன்றுநல்லிசைச்சென்றோரும்ப' லாகி, 'தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையார்' அளவளாவிப்பேசி மகிழும்படி எல்லாச்சௌகரியங்களையும் அமைத்துதவும் ஸேதுபதி யவர்கள்முன்பாகவும் சிற்றறிவினேன் நூலாராய்ச்சி என்றவிஷயத் தைப்பற்றி உபந்யஸிக்கப்புகுந்தது, 'கற்பனவூழற்றார்கல்விக்கழகத் தாங்கு' என்று தொடங்கியசெய்யுட்பயனுக்கு ஓர் இலக்கியமாவதை யொக்கும். எனினும், 'அறையுமாடரங்கும்மடப்பிள்ளைகள், தறையிற் கீறிடிற் றச்சர்' கோபியார்களாதலாலும், 'புல்லாவெழுத்திற் பொரு ளில்வறுங்கோட்டி, கல்லாவொருவனுரைப்பவுங் கண்ணோடி, நல்லார் வருந்தியுங்கேட்பர்' என்ற தைரியம்பற்றியும், இம்மஹாஸபையின் கண் இன்று எழுந்துநிற்கத்துணிந்தேன். எடுத்துக்கொண்டவிஷயத் தின் பெருமையையும் என் சிற்றறிவையும் உய்த்துணரவல்ல பெரி யோர்கள் இதிற்காணப்படும்பிழைகளைப் பொறுத்தருளவேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்.

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷக்கூட்டத்தில் வாசிக்கப்பெற்றது.

நூலாராய்ச்சி.

ஒவ்வொருதேசத்துப்பாஷாசரித்திரத்திலும், நூலாராய்ச்சி என்பது அநேகநூல்கள்தோன்றியபிறகே முன்னுக்குவரும் ஒரு கல்விவிசேஷமாம். நூலாராய்ச்சியின்நோக்கம் "நூல்நுட்பம்" கொள்வதாம். எனவே, பழையநூல்களிற் காணக்கிடக்கும் அரிய வுண்மைகளை ஆதாரமாகக்கொண்டு அவற்றை உரையாணியாக வைத்து மற்றநூல்களின் அருமைபெருமைகளை யுய்த்துணர்வதே ஆராய்ச்சிக்குப்பொருத்தமானவழியாகும். உலகத்தில் மனிதர்களின் நடையுடைபாவனைகளிற் சிலவற்றை யிழிந்தகுணங்களென்றும் சிலவற்றைச் சிறந்தகுணங்களென்றும் யாவருஞ்சொல்லுவார்கள். இவ்வுணர்ச்சியையே உரையாணியாகக்கொண்டு மனிதர்நடை நல்லதென்றும் கெட்டதென்றும் நாம் ஆராய்கிறோம். அதுபோலவே சில சிறந்தநூல்களிற் காணக்கிடக்கும் அழகிய குணவிசேஷங்களைக்கண் டனுபவித்தபெரியோர்கள் மற்றநூல்களைப்படிக்கும்போது தாம் பழையநூல்களிற்கண்ட குணவிசேஷங்கள் புதியநூல்களிலும் இருக் கின்றனவாவென்று ஆராய்ந்துபார்த்தே புதிய இலக்கியத்தின்றன் மையை எடுத்துரைப்பார்கள். நூல்கள் இத்தன்மையனவென்று ஆராய்ந்தனுபவித்தலே ஆராய்ச்சிசெய்பவர்களுடையகடமையாகும்.

நூல்கள்.

'உரத்தின்வளம்பெருக்கியுள்ளியதீமைப், புரத்தின்வளமுருக்கி' 'மாந்தர்மனக்கோட்டந்தீர்க்கும்' காரணத்தாலும், 'நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமை' யைத்தருவதாலும் நூல்களைவாசித்தே நாம் ஒழுக்கத்தில் மேம்படவேண்டுமென்று பெரியோர்கூறுகின்றனர். இத்தகையநூல்களின்றொகுதியே பாஷையெனப்படும். உலகத்திற் காணக்கூடியவுண்மைகளை நூல்கள் நமக்கு இரண்டுவிதங்களாகத் தெரிவிக்கின்றன. இவற்றை முறையே பொறியுணர்ச்சியால் தெரிந்து கொள்ளக்கூடியவுண்மைகளென்றும், மனவுணர்ச்சியால் அறியக்கிடக் கின்றவுண்மைகளென்றும் பிரிக்கலாம். விழிகளாலும் மற்றப் பொறி களாலும் அறியக்கூடியவை ஸாமான்யமானவை. மனத்தாலாராயக் கிடப்பனவே அரியவுண்மைகள். காதுக்கு இனிமைபயக்கும் ஓசை நயத்தை முதல்வகுப்பிலும், மனத்திற்குத் திருப்தியையுண்டுபண்ணி

இத்தேசத்திலும் பிறதேசங்களிலுமுள்ள புலவர்கள் உலகவிஷயங்களை எவ்வாறு உணர்ந்தார்களென்றுதெரிவிப்பதை இரண்டாவது வகுப்பிலும் சேர்க்கலாம். இவையிரண்டும் நூல்களுக்கு இன்றியமையாதவை. எல்லாரும் எளிதிலறிந்து ஞாபகத்தில்வைத்துக்கொள்ளக்கூடியதும் பிறருக்குத்தெரிவிக்கக்கூடியதுமாக அமைவது ஓசைநயமே. நூல்களில் ஓசைநயம் அமைந்திருக்கவேண்டுமென்று எமர்ஸன் என்ற ஆங்கிலவித்வான் அடியில்வருமாறு வற்புறுத்துகின்றார்.

"நாமெல்லாரும் ஸங்கீதத்திற் பிரியமுள்ளவர்களாகவேயிருக்கிறோம். ஓரேசத்தமோ அல்லது வேறுவேறுசத்தங்களோ ஒழுங்காகவும் கணக்காகவும் முறைமுறை திரும்பிவரக்கேட்பதில் நம்மனம் செல்லுகின்றது. குழந்தை தாலாட்டைக்கேட்டுத் தூங்குகின்றது. போர்வீரன் யுத்தபேரிகைகளைக்கேட்டு வீரத்தன்மையில் மேம்படுகிறான். காலவரையறை இதயத்தின் ஓசையிலிருந்து உண்டாகின்றதென்னலாம். நவரஸங்களையும் செம்மையாகத்தெரிவிப்பதற்குப் பொருத்தமான ஓசைகளும் அவ்வோசைகளைநிரப்புவதற்குரிய வாக்கியங்களும் தாமே இனிதின் அமைவன. சொல்லும் பொருளும் போலவும் பூவும் மணமும்போலவும் அவை பிரியாதன." ஆதலால் இவற்றின் உதவியாலேயே அரியபெரியகருத்துக்களை எடுத்துரைத்தல் எளிதாகும்.

ஆராய்ச்சி.

இனி, மனத்தாலாராயவேண்டியவுண்மைகளைத் தெரிந்துகொள்ள மூன்று முக்கியமானவழிகளுண்டு. நூல்களை ஆராய்ச்சிசெய்பவர்கள் ஒவ்வொருநூலிலும் மூன்றுவிஷயங்களைக்காண முயற்சிசெய்யவேண்டும்.

முதலாவது விஷயத்தின்பெருமை. அதாவது மனத்தாலாராய்ந்தறியவேண்டிய நுண்ணியவுண்மைகளை நூல் தெரிவிக்கின்றதாவென்று கவனிக்கவேண்டும்.

இரண்டாவது எடுத்துச்சொல்லும்விதம். அதாவது எடுத்துக்கொண்டவிஷயத்துக்கும் நூல்வகைக்கும் பொருத்தமானமுறைப்படி விஷயங்கள் தகுந்தவிதமாக எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றனவாவென்று பார்க்கவேண்டும்.

மூன்றாவது, நூல் இன்பம்பயக்கின்றதாவென்று கவனிக்கவேண்டும். அதாவது ஒவ்வொருவிஷயமும் உள்ளது உள்ளவாறே படிப்பவர்மனத்திற்றோன்றுமாறு எடுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றதாவென்றும், அவை படிப்பவர்க்கு ஆனந்தத்தையுண்டுபண்ணுகின்றனவாவென்றும் ஆராயவேண்டும்.

முதலது: சிறந்தஅறிவாளரென்று யாவரும் ஒப்புக்கொண்டபுலவர்கள்கூறியவற்றை நாம் விஷயங்களைத்தெரிந்துகொள்வதன்பொருட்டு ஆராய்கின்றோம். மற்றவர்கள் இயற்றியநூல்களை ஆராய்ச்சிசெய்வது அவர்தம்நூல்களைச் சீர்தூக்கிப்பார்ப்பதன்பொருட்டே. 'முன்னோர் மொழிபொருளேயன்றியவர்மொழியும், பொன்னேபோற்போற்றுவது' வழிநூலுக்கும் சார்புநூலுக்கும் இலக்கணமாதல்பற்றிப் புதிய நூலைப் பழையநூலோடு ஒப்பிட்டுப்பார்ப்பது மரபு. இவ்வாறு ஆராய்ச்சிசெய்வதில் விஷயத்தின்பெருமையையறிய உரையாணியாகவுள்ளது உண்மை. நூலிற்சொல்லப்பெற்றவிஷயம் யாவரும் ஒப்புக்கொள்ளும்படியான பழையவுண்மையாக இருத்தல்வேண்டும். செய்யுளில் எடுத்துரைக்கப்பெறும் உண்மைக்கும் தேசசரித்திரம் வியவகாரம்முதலியவற்றைக்கூறும் உண்மைக்கும் தன்மையில் வித்தியாஸமுண்டு. அதாவது நியாயஸ்தலத்திற் சாக்ஷிசொல்வதுபோலத் தேசசரித்திரத்தில் உண்மை விரவிவரும். மற்றநூல்களோ அவ்வுண்மைகள் ஆசிரியர்மனத்துக்கும் மற்றவர்மனத்துக்கும் எவ்வாறுபுலப்பட்டனவென்பதைத் தெரிவிப்பன. ஆதலால் முக்கியமானதென்று எடுத்துக்கொண்ட சிறந்ததோர் உண்மையைமட்டும் விஸ்தாரமாக எடுத்துச்சொல்லி அதனை நடுநாயகமாகவும் மற்றவுண்மைகளை ஸாமான்யமாகவும் நூல்களிற்பாவிப்பது முறை. ஏனென்றால், தேசசரித்திரத்திற்சொல்லப்பெற்றவர்கள் உண்மையில் அநேக குணங்குற்றமமைந்தவர்கள். ஆனால், காப்பியத்தலைவன்முதலியோர்களோ தன்னிகரில்லாததலைமையும் சீலமுமுடையவர்கள். உலகத்தில் யாவரும் உயர்த்திப்பேசும்படியான சிறந்தநற்குணங்கள்யாவும் திரண்டு வடிவமெடுத்து உலாவியதென்று எண்ணும்படியாகவே நூல்களில், தலைவன் தலைவியர் கூறப்படுவர். தலைவன் தலைவியர்தமக்குள் இருக்கவேண்டிய அன்பு, ஆண்டானடிமைத்திறமுதலிய சிறந்தநற்குணங்களுக்கு இலக்கியங்களை இதிகாசபுராணங்களுக்குள்ளேயே நாம்

தேர்ந்தெடுக்கின்றோம். ‘கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை’ என்றவிடத்துக் கொடைவிசேஷமமைந்த பறம்பிற்கோமானாகிய பாரியே பாராட்டப்பெற்றிருக்கின்றான்.

தலைவன் வெளியே பொருள்வயிற்பிரிந்திருக்கநேர்ந்தபொழுது அவன்வருமளவும் அவன்க்ஷேமத்தையுத்தேசித்து நோற்றுக் கொண்டு அவன்வரவை அதிகஆவலோடு எதிர்பார்த்துத் தனித்திருக்கும் தலைவியைப்பற்றிக்கூறுமிடத்து, ஸாமான்ய உதாரணங்களை எடுத்துச்சொல்லுவதைவிட,‘பாசறைத்தொழில் விறல்தந்து இன்னே முடிக’ என்று கொற்றவையைப்பரவும் நெடுஞ்செழியன்றேவியையே எடுத்துச்சொல்லுதல் தக்கது.

இரண்டாவது: நூல்களில் விஷயத்துக்கேற்றவிதமாக நடையும், ஓசையும், நூற்பரப்பும் அமைந்திருக்கின்றனவாவென்று கவனிக்கவேண்டும். ஒருகுறித்தவிஷயம் அல்லது உண்மையையே முக்கியமாகக்கொண்டு எழுதப்புகும்கவி தான் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கேற்றவிதமாக நூலை வரையறுத்துக்கொண்டு எதை அதிகச் சிறப்பாகச்சொல்லவேண்டுமோ அதைமட்டும் சிறப்பித்துச் சொல்லி, தனதுகருத்து, படிப்பவர்மனத்திற்பதியும்படி இடத்துக் கேற்றவாறு இசைநயத்தையும் அமைத்து விளக்கவேண்டும். இந்தச் சிறப்பு, கவிஞரிடத்திற் றோற்றவேண்டுமானால் அவர்கள் தாமே நூலாராய்ச்சியில்வல்லுநராக இருத்தல்வேண்டும். தமிழ்ப்பாஷையில் அநேககவிஞர் ஆராய்ச்சியிலும் வல்லுநராக இருந்தார்களென்பதற்கு அவர்கள் இயற்றியநூல்களில் மேற்சொன்னநயங்கள் மிக்கிருப்பதே தக்கசான்றாகும். இந்நயங்கள் செவ்வனே அமைய இசையும் பதமும் மிக்க உபயோகமாக இருக்கின்றன. ஆதலாற் கவிகள் பதங்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

சுக்கிரீவன் இலக்குமணனை உண்ணுமாறுவேண்ட, உண்ணுவதற்குமனமொப்பாத இலக்குமணன்கூறிய,

“வருத்தமும்பழியுமேவயிறுமீக்கொள
இருத்துமென்றாலெமக்கினியதியாவதோ
ரருத்தியுண்டாயினுமவலந்தான்றழீஇக்
கருத்துவேறாற்றபினமிழ்துங்கைக்குமால்” (கிஷ்-கிஷ்கிந்தைப்படலம்)

என்ற செய்யுளிலுள்ள ஒவ்வொருபதமும் இலக்குமணன் துயரத்தின் அளவைத்தெரிவிப்பதாக அமைந்துள்ளது. விசயை நந்தட்டனையும் சீவகனையும் அருகேயணைத்து நற்புத்திசொன்னதைக்கூறுவனவாகிய 'சிறகராற்பார்ப்புப்புல்லித் திருமயிலிருந்ததேபோல்' என்றற் றொடக்கத்துவார்த்தைகள் அவர்கள் அன்பையும் அவர்கள் ஆலோசித்தவிஷயத்தின் அருமையையும் தெரிவிக்கின்றன. 'தூம்பியாதுமில்லாக்குளம்போன்றதென்றோமில்பண்டம்' என்றற் றொடக்கத்தனவற்றில் உள்ளவார்த்தைகள் சீவகன்வரும்வரையில் ஸாகரதத்தன்கடையில் வியாபாரமேநடக்கவில்லையென்றவிஷயத்தைச் செவ்வனே தெரிவிக்கின்றன. இடத்துக்கேற்றபடி செய்யுளும் ஓசையும் இனிதினமைவதைச் சிறந்ததமிழ்நூல்களிற் பரக்கக்காணலாம். "பெண்ணுக்கணிகலமே பேரழகுக்கோருருவே" என்று தொடங்கிய கந்தபுராணச்செய்யுளில் உள்ளவார்த்தைகள் விருத்தையிறந்ததைக்குறித்து அவள்தோழியர்வருந்துவதை உள்ளவாறு புலப்படுத்துகின்றன. விரிவஞ்சி அதிக உதாரணங்களை எடுத்துக் கொள்ளவில்லை.

மூன்றுவது: நூலில் மனத்தாலாராய்ந்தனுபவிக்கத்தக்க குணவிசேஷங்களில் நூலின் வெளித்தோற்றத்தால் அழகும் பொருளால் இன்பமும் தோன்றும். சொல்லழகும் பொருளின்மேன்மையும் பிரியாதன.

"சேலனையசில்லரியகடை சிவந்தகருமணியம்
பாலகத்துப்பதித்தன்ன [படியவாய்முனிவரையும்
மாலுறுப்பமகிழ்செய்வமாண்பினஞ்சுமமிர்தமுமே
போல்குணத்தபொருகயற்கண்செவியுறப்போந்தகன்றனவே"]
(சீவக—நாமக)

என்றசெய்யுளில் நூலாசிரியர்மனத்திற்கொண்டகருத்தைப் புலப்படுத்துவோராகிய ஆசிரியர்நச்சினார்க்கினியர் 'மாயோனையும் பாற்கடலையும் முகத்தேவைத்தபடி; கருமணியைப் பாலிற்பதித்தாற் பால் நிறம் கெடும் என்றறிக' என்று விசேஷவுரை எழுதியுள்ளதிலிருந்து அறியக்கிடக்கும் உண்மைகள் பல.

நூலைமுடிக்கும்போது ஒரு ஸந்தோஷச்செய்தியோடு முடிக்க வேண்டுமென்று கவிஞர் எண்ணுவார்கள். ஆன்மகோடிகளுக்கு

இன்பமேபயக்கும் ஈசன் ஒருவன் உளன் என்றவுண்மையைவிளக்க வேண்டி அவர்கள் இவ்வாறு நூலைமுடிக்கிறார்கள். சிலப்பதிகாரத்தைப்போல வேறுவகையாக முடிவுபெறும்நூல்களில், கவிஞர் உலகத்தில் துன்பத்துக்குக்காரணம் ‘தற்செய்தகிழவனை நாடிக்கொளற்குவல்லதாய தொல்லைப்பழவினையே’ என்றுகூறி உத்தமநீதிகளைச் சொல்லுவார்கள்.

இப்படி விஷயத்தின்பெருமையையறிய உண்மையும், விஷயம் அடங்கியிருக்கும் உறுப்பாகிய செய்யுள்நடையையுணரத் தகுதியும், மனத்தாலாராய்ந்தறிந்துகளிக்கவேண்டிய சிறப்புக்களையுணர அழகும் நூலாராய்ச்சிசெய்யும் புலவர்களுக்கு உரையாணிகளாக அமைகின்றன.

சிறந்தநூல்களைப்படிக்குந்தோறும் நமதுமனம் யாதொருதடையுமின்றிக் கவியின்மனத்தூடுசெல்லுகின்றது. அப்போது சில அரியவுண்மைகள் ஆசிரியர்மனத்துக்குத்தோற்றியவாறே படிப்பவர்மனத்துக்குந்தோற்றும். இந்தப்பழக்கத்தைக்கொண்டு மற்றப்புத்தகங்களிலும் இப்படிப்பட்டசிறப்பு இருந்தால் அந்நூல்களில்விருப்பமும் இல்லாவிட்டால் வெறுப்பும் தோற்றும். கவியின் சிறந்தகுணங்களிற் களிப்பும் சிறந்தவையல்லாதகுணங்களில் வெறுப்புந்தோற்றுவது ஒருவருக்குப் பாஷையிற் சுவையிருக்கின்றதென்பதைத்தெரிவிக்கும்.

ஸாமான்யஸங்கதிகளையும் கவிகள் எவ்வாறு எடுத்துச்சொல்லுகிறார்களென்பதை யாராய்வதில் நாம் மனமகிழ்வோம். யாற்றுநீர் ஸமுத்திரத்திற்கலப்பதைக் கவிகள் எடுத்துச்சொல்வதில் விசேஷநயங்கள் தோற்றுகின்றன.

“திரைபொருகனைகடற்செல்வன்சென்னிமேல்
நுரையெனுமாலையைநுகரச்சூட்டுவான்
சரவெனும்பெயருடைத்தடங்கொள்வெம்முலை
குரைபுனற்கன்னிகொண்டிழிந்ததென்பவே” (சீவக.)

என்ற செய்யுளிலும்,

“நால்வகைமலர்சேரைம்பானதியெனும்பருவக்கன்னி
கால்வழிக்கலிங்கமார்ப்பக்கனதனம்பணைப்பப்பாங்கின்
பால்வளைத்திரைக்கைவீசிப்பன்மலர்த்தொடைகள்சூடிச்
சேல்விழிகளிப்பவேலைச்செல்வனைமணந்ததன்றே”
(திருக்குற்றால.....திருநதி.)

என்ற செய்யுளிலும், இயற்கை எவ்வளவு அழகாகவர்ணிக்கப்பட்டுள்ளது ?

இவ்வாறு நூல்நுட்பங்களையறியச் சிறந்தகருவியாகவுள்ளது நூலாராய்ச்சியாதலால் இது ஆங்கிலத்திலும் தமிழிலும் எவ்வாறு செய்யப்பெற்றுவந்ததென்பதை யோசிப்போம். இப்படி யோசிப்பது அவ்வப்பாஷையின் ஏற்றத்தாழ்வை நிச்சயிப்பதற்கன்று. ஏனெனிற் காலதேசபேதங்களாற் கவிகள்மனத்தில், தற்செயலாக அநேக எண்ணங்கள் தோற்றலாம். இவற்றை ஒப்பிட்டுப்பார்ப்பது மனத்துக்கு உற்சாகத்தைக்கொடுக்கும். ஆங்கிலபாஷாநிபுணர்கள் அநேக காலங்களில் இதரதேசத்துநூல்களை ஆராய்ச்சிசெய்து ஒற்றுமை நயங்களைக்கண்டு ஆனந்தித்திருக்கின்றார்கள்.

ஆங்கிலநூலாராய்ச்சி.

ஆங்கிலநூலாராய்ச்சியென்பது ஸமீபகாலத்தில் தோற்றியதொரு விசேஷம். ஆங்கிலபாஷாசரித்திரங்களால் அப்பாஷையிற் சிறந்தநூல்கள் கி. பி. 670-ம் ஆண்டுமுதலே எழுதப்பெற்றுவந்தனவென்று தெரிகின்றது. ஆங்கிலநூலாராய்ச்சி 1580-ம் ஆண்டுமுதல் ஆரம்பித்ததாகச்சொல்லலாம். நாடகங்களைக்கண்டித்து காஸ்ஸன் (Gosson) என்பவர் ஒருபுத்தகம் எழுத, நாடகம் அவசியம் என்று லாட்ஜ் (Lodge) என்பவர் விளக்கிக்காட்டினார். பிறகு பழையநூல்களிலுள்ள சிறப்புக்களை யெடுத்துக்காட்டினாலன்றிச் சிறந்த வழிநூல்கள் ஏற்படாவென்று எண்ணி, பட்டன்ஹாம் (Puttenham) (1520—1700) என்பவரும் வெப் (Webbe) என்பவரும் ஆராய்ச்சி விளக்கம் எழுதினார்கள். அவர்களுக்குப்பிறகு டிரைடன் (Dryden) என்பவர் (1631—1700) நூல்களிலுள்ள விஷயங்களை மட்டும் பாராட்டுவதோடுநில்லாமற் காலத்துக்கேற்றபடி இசையும் செய்யுள் வகையும் எவ்வாறு பேதப்பட்டுவந்தனவென்பதையும் ஆராயவேண்டுமென்று வற்புறுத்தினார். பிறகு (Johnson) ஜான்ஸன் (1709-1784) என்பவர் குற்றங்கூறலையியல்பாகக்கொண்டு ஆராய்ச்சி செய்தார். இவர்காலத்து ஆராய்ச்சி அத்துணைச்சிறப்புள்ளதன்று. பிறகு (Goldsmith 1728—1774) கோல்ட்ஸ்மித் இயற்கையை யுள்ளவாறேகூறுவதுதான் கவிசாதுர்யம் என்று கொண்டாடினார்.

இவர் (Gray 1716—1771) க்ரே என்றகவிக்கு உபாயங்களைக்கூறு மிடத்து 'ஜனங்கள் இயற்கையை ஆராய்ந்து உண்மைகளைக் கண்ட வண்ணமே எழுதுக' என்று சொன்னாராம். இந்தக்கவி பழைய நூல்களைப்படிப்பதிற் பற்றுள்ளவர்.

பிறகு சிலபத்திரிகைகள்தலையெடுத்துத் தமக்குவேண்டியவர்கள் எழுதியநூல்களைச் சிலாகித்தும், மற்றவர்கள் எழுதியநூல்களைக் கண்டித்தும் உண்மையான ஆராய்ச்சியைச்செய்யாமல் அநேகம் சிறந்தபுலவர்கள் மனம்புழுங்குமாறுசெய்தன. இதனால் ஆராய்ச்சி செம்மையாகநடைபெறவில்லையென்று பிற்காலத்திற்சொல்லவந்த ஆராய்ச்சியிற்பேர்பெற்ற (Mathew Arnold) மாத்யூ ஆர்னால்ட் என்பவர் இந்தியர்களின்மனநிலைமையை ஓரிடத்தில் மிகப்பாராட்டி எழுதியிருக்கிறார். காய்தலுவத்தலகற்றிப் பொருள்களை ஆராயுங் குணம் இந்தியர்களிடத்தில் இருக்கின்றதென்றும் அந்தமேன்மை யானகுணத்தை ஆங்கில ஆராய்ச்சிப்புலவர்கள் கைப்பற்றவேண்டு மென்றும் இவர் எழுதியிருக்கிறார்.

பிறகு [Coleridge (1772—1804).] கோல்ரிட்ஜ் என்பவர் நூலாராய்ச்சிமுறைகளைச் சீர்ப்படுத்தினர். இவர் செய்யுள் இப்படி யிருக்கவேண்டுமென்றும் அதிற்காணவேண்டியசிறப்புக்கள் இவை யென்றும் நிச்சயித்தார். இவர்கருத்து, பெரும்பாலும் 'புவியினுக் கணியாயான்றபொருடந்து' என்றற்றொடக்கத்துவாக்கியங்களிற் கம்பர் செய்யுளைப்பற்றிப் பொதுவாகக்கூறியகருத்தைத்தழுவி யுள்ளது. நவீனநூலாராய்ச்சி, (Carlyle 1795—1881) கார்லைல் என்ற ஆராய்ச்சிப்புலவர் தோன்றியபிறகே முன்னுக்குவந்ததென்று சொல்லலாம். தமது ஸொந்த அபிப்பிராயங்களைக் கவிக்கூற்றிற்காண முயற்சிசெய்யக்கூடாதென்றும், வெளித்தோற்றத்தைமட்டுங் கண்டு பிரமிக்காது, கவிஞர்கருத்தையும் அவர்கள் எடுத்தாளும் சொற்களை யும், அச்சொற்களிலமைந்துள்ள பொருளையும், ஆராய்ச்சிசெய்ப வர்கள் உய்த்துணரவேண்டுமென்றும் இவர் வற்புறுத்தினர். இவர் கருத்துமுழுமையும் இன்னும் அனுஷ்டானத்துக்குவரவில்லை யென்று (Vaughan) வான் என்ற அறிவாளர் தெரிவிக்கிறார். தற் காலத்தில் ராலே (Raleigh) என்பவர் நூலாராய்ச்சிசெய்வதில் மேம் பட்டுவிளங்குகிறார்.

இதுவரையில் ஆங்கிலநூலாராய்ச்சியின்விருத்தாந்தங்களைக் கவனித்ததில், ஆங்கிலத்தில் நூல்களையாராயும்வகைகள் இவை யென்று தெரிந்தன. அவை வருமாறு:—வெளித்தோற்றவாராய்ச்சி: இதிற் சொல், ஓசைமுதலியவற்றைக் கவனிக்கவேண்டும். கருத்தாராய்ச்சி: இதிற் சொல், பொருள், ஓசைமுதலியவற்றுள் உள்ள ஒற்றுமைநயம், கருத்தின்மேன்மை, நூற்பயன்முதலியவற்றை யாராயவேண்டும்.

அநேகநூல்கள்தோன்றியபிறகே நூலாராய்ச்சி தலையெடுக்கின்ற தென்பதையும், சிலப்பதிகாரத்துக்கு அரும்பதவுரைக்குமுன்னே உரையொன்றிருந்ததையும், சிந்தாமணிமுதலியநூல்களுக்கு நச்சினார்க்கினியரெழுதியுள்ள உரைக்குமுன்னே உரைகளிருந்தனவென்பதையும் உய்த்துணருங்கால், தமிழ்மொழியின்பழமையும் தமிழ்க் கவிஞர்களுடைய ஆராய்ச்சியின்விசேஷமும் செம்மையாகவிளங்குகின்றன. கூர்த்தகல்விகேள்வியுடைய உரையாசிரியர்களாகிய மஹா உபகாரிகள் எழுதியுதவிய உரைநுட்பங்கள் நமக்கு நிரம்ப இன்பம் பயக்கின்றன.

ஆங்கிலபாடசாலைகளில் பாஷையைக்கற்பிக்கும்போது தொகையானபொருளை முன்னேகூறிப் பிறகே பதங்களின் அர்த்தத்தையும் மற்றவிசேஷங்களையும் போதிக்கவேண்டுமென்று இப்போதுதான் வற்புறுத்துகிறார்கள். இது புதுமுறைப்படிபாடம்போதித்தல் எனப் பெயர்பெற்றுள்ளது. சிலப்பதிகாரப்பதிகவுரையில் அடியார்க்குநல்லார் அகத்திணைப்பொருட்பாகுபாடுகளையும் புறத்திணைப்பொருட்பாகுபாடுகளையும் விவரித்தாற் கேட்போர்க்கு இன்பம்பயவாது உணர்வுசலிக்குமாதலின் வந்தனவந்துழிக்காட்டுதலைக்கருதிற்று இவ்வுரை என்று கூறியிருத்தலையும், உரையினதுபொதுவிலக்கணங்களைக் கூறுமிடத்து, நன்னூலில் அவ்விலக்கணங்களைப் பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள்முதலாக வகைப்படுத்தியிருத்தலையும் நோக்குங்காலத்தில் மேற்கூறியநவீனமுறையில், தமிழகம்ஸம்பந்தப்பட்டவரையில் நவீனம் ஒன்றுமில்லையென்பது விளங்கும். உதாரணமாக,

“குணவாயிற்கோட்டத்தரசுதுறந்திருந்த
குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு”

என்றவிடத்தில் 'இளமைப்பருவத்தே இராஜபோகத்தைத்துறத்தலரு மையால் துறந்து என்றும் அங்ஙனம் போகம்நுகர்ந்தவிட த்தே மீட் டும் தவவுருவந்தாங்கியிருத்தலருமையான் இருந்தென்றுங்கூறினர்' என்று உரையாசிரியர் அடியார்க்குநல்லார் சொற்பொருள்விசேஷங் களைப் பாராட்டியெழுதிய உரைநயம் வியக்கத்தக்கது.

இனி ஆங்கிலத்தில் இயல் இசை நாடகநூல்களை ஆராய்ச்சி செய்யும்முறைகளைச் சுருக்கமாக எடுத்துச்சொல்லும் க்ராஷா (Crashaw) என்பவர் நாடக இலக்கணவுறுப்புக்களைப்பற்றி எழுதியிருப் பதையும், அடியார்க்குநல்லார் "இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய. அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடம் என்ப. திணை 2; பால் 14; செய்யுள் 6; நிலம் 4; காலம் 12; வழு 14; வழக்கு 2; இடம் 2; என்று பொருளாராய்ச்சியைவகைப்படுத்திக் கூறியிருத்தலையும், சீர்தூக்கிப்பார்க்குமிடத்துத் தமிழுரையாசிரியர்க ளின் ஆராய்ச்சியின்விசேஷம் நன்குவிளங்கும்.

பிரதிகள் ஆராய்ச்சி.

பழையபிரதிகள் சாஸனங்கள்முதலியவற்றை ஆராய்ந்து ஒப் பிட்டுப்பார்த்துப்பதிப்பித்தல் மிக்கசிரமஸாத்தியமானது. இவற்றைச் செம்மையாக ஆராய்ச்சிசெய்பவர்களே தேசசரித்திரத்தை நன்கு உணர்வார்கள். தேசசரித்திரஸம்பந்தமான ஆராய்ச்சியில், பாஷை நடையைவிட விஷயங்களின் உண்மையையே மிகக்கவனமாக ஆராய வேண்டும். பழையபிரதிகளையாராய்வதிலேயே தமது உடல்,பொருள், ஆவிமூன்றையும் செலவழித்துவரும் பெரியோர்களே இவ்வித ஆராய்ச்சியின்நுட்பங்களை எடுத்துக்கூறத்தக்கவர்கள்.

பிரஞ்சுபாஷையில் இவ்வித ஆராய்ச்சியைப்பற்றி லாங்ளாயி ஸீனுபாயி (Langlois Seignobois) என்றபுலவர்கள் விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்கள். அவர்களின் அபிப்பிராயங்களை முறையே வாசித்தல், ஆராய்தல், தெளிதல் என்று மூன்றுவகையாகப் பிரிக்க லாம்.

வாசித்தல்.

ஒருபிரதியைப்பார்த்து எழுதுவதில் அநேகம்பிழைகள் நேர்ந் திருக்கலாம். மூலப்பிரதியே ஒப்பிடுவதற்குக்கிடைக்காமலிருக்கலாம். சிலவிஷயங்களை ஊகித்தே யறியவேண்டியிருக்கும். ஒரேதவறு

அநேகம்பிரதிகளிற்காணப்பட்டால், அதனைச் செம்மையாகப்பரிசோதிக்கவேண்டும். நூலாசிரியர் இன்னாரென்பதை நியாயங்களைக் கொண்டு நிச்சயிக்கவேண்டும்.

ஆராய்தல்.

நூலைச் செம்மையாக ஆராய்ச்சிசெய்தபிறகே அதன்உண்மையான வடிவம் புலப்படும். குறிப்புக்களைத் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டேவருவதைவிடத் தனித்தனி காகிதங்களில் எழுதிவருவது சிறந்தமுறை. ஆராய்ச்சிசெய்பவர்களிடத்திற் சில குணவிசேஷங்கள் இயல்பாகவே அமைந்திருக்கவேண்டும். (1) எடுத்துக்கொண்ட முயற்சியில் அதிகப்பிரியமிருக்கவேண்டும். (2) நெடுநாட்களாகத் தெரியாதவுண்மைகளைக் கண்டுபிடிப்பதில் ஊக்கமும், அவற்றைத் தெரிந்துகொள்வதில் ஸந்தோஷமும் இருக்கவேண்டும். தமக்குத் தோற்றியவாறெல்லாம் பதிப்பிக்காமற் கண்டவண்ணமேபதிப்பிக்க வேண்டும். (Froude) பிரவுட்டென்ற ஆங்கிலவித்வான் அவஸரப்பட்டு ஆராய்ந்து, கண்டது ஒன்றிருக்க வேறொன்றை எழுதிவிடுவாராம். இவ்வாறு யோசியாமற்பதிப்பதைப் பிரவிட்வியாதி (Froude's disease) என்று சொல்லுவார்கள். ஆராய்ச்சிசெய்பவர்கள் இவ்வியாதி தம்மையணுகாவண்ணம் தடுத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

தெளிதல்.

ஆசிரியர்மனத்தில் என்னகருத்து இருந்திருக்கலாமென்பதை அவர் எழுதியதிலிருந்தே ஊகிக்கவேண்டும். இவ்வாறு ஆராய்ச்சி செய்ய ஒருவருக்கு நிறைந்தபாஷாஞானம் இன்றியமையாதது. ஸாதாரணமாகப் பாஷையிற் பழக்கமட்டுமிருந்தால் அது போதாது. சிலகாலங்களிற் சிலபதங்களுக்குச் சிறப்பாகச் சில அர்த்தங்களிருக்கலாம். அவற்றைத்தெரிந்துகொண்டு இடத்துக்கேற்றவாறு வாக்கியங்களின்பொருளைத் தெளிந்துகொள்ளவேண்டும். மனத்தாலாராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டிய அரியவுண்மைகளைக் கவிகள் கதைகள்மூலமாக ஸுலபமாகத்தெரிவித்திருக்கலாம். இவற்றிற் கவியின்கருத்தை ஆராய்ந்துதெரிந்துகொள்ளவேண்டும். யாதொரு ஆதாரமுமின்றி, கர்ணபரம்பரையாக அநேகவிஷயங்கள் வழங்கி

வரலாம். இவற்றின் உண்மையை நிச்சயித்துக்கொள்ளவேண்டியது அவசியம். தமிழ்க்கவிகளைப்பற்றி அநேகஞ்செய்யுட்கள் கர்ணபரம் பரையாகவேவழங்கிவருகின்றன. அவற்றைக் கற்றறிந்தபெரியோர் களே சீர்தூக்கிப்பார்த்து அவற்றின் உண்மையை நிச்சயிக்கவல்ல வர்கள்.

மேற்கூறிய ஆராய்ச்சிமுறைகளுக்கு இலக்கியங்களாகப் புறநா னூறுமுதலிய சங்கநூற்பதிப்புக்களைச்சொல்லலாம். லாங்கிளாயி ஸீனுபாயி இயற்றியுள்ளகிரந்தத்திற்கூறப்பட்டமுறைகளையெல்லாம் இப்பதிப்புக்களிற்காணலாம் விரிவஞ்சி ஒவ்வொன்றுக்கும் உதா ரணங்கொடுக்காமற் சில முக்கிய அம்சங்களைமட்டும் இங்கு எடுத்துக் கொண்டேன்.

(1) புறநானூற்றுச்செய்யுட்களிற் பிரதிகளிற் சொற்கள் சிதைந்தவிடங்களைக்காட்ட ஒற்றைப்புள்ளிநிரைகள் அமைக்கப்பட் டுள்ளன.

(2) புறநானூற்றிலிருந்து, வேறுநூல்களினுடைய பழையவுரை களின் இடையிடையே உரையாசிரியர்களாற் பூர்த்தியாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக்காட்டப்பெற்றசெய்யுட்கள்மூலமாகச் சில குறைந்தபாகங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

(3) சிந்தாமணிமுகவுரையில், திருச்சிற்றம்பலம் பெரும்பற்றப் புலியூர் என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் ஏழெ ழுத்தொருமொழிக்கும் உதாரணமாகக்காட்டியதிலிருந்து ஆசிரியர் நச்சினார்க்கினியர்மதத்தைநிச்சயிப்பது ஓர் ஆராய்ச்சிவிசேஷம்.

(4) சிலப்பதிகாரத்தில் இக்காலத்துவழங்கப்பெறாத சில இயற் றமிழ்ச்சொற்கள் விளங்காதிருப்பன, மற்றநூல்களாலும் பழைய வுரைகளாலுமே ஆராய்ச்சிசெய்ய விளங்கக்கூடுமென்றுதுணிதல் மேலேகாட்டிய ஆராய்ச்சிமுறையில் அடங்கும்.

(5) திருப்பெருந்துறை மிழலைக்கூற்றத்திலுள்ளது. மிழலைக் கூற்றம் "நெல்லரியுமிருந்தொழுவர்" என்ற புறநானூற்றுச்செய்யு ளால் நெய்தனிலத்தைச்சார்ந்ததென்று தெரிகின்றது. ஆதலால், திருப்பெருந்துறை கடற்கரையிலுள்ளதோரூர். திருவாதவூரர் உப தேசம்பெற்றஸ்தலம் இதுவேயெனத் திரிசிரபுரம்வித்வான் மீனாக்ஷி

சுந்தரம்பிள்ளையவர்களியற்றிய திருப்பெருந்துறைப்புராணமுகவுரையிற்குறித்திருப்பது சரித்திரசாஸன ஆராய்ச்சிவகையிற்சேரும்.

(6) அநேகநூல்களை ஆராய்ந்து கருத்துக்களைப் புலவர்கள் எப்படித்தெரிவித்திருக்கிறார்களென்பதையறிந்து படிப்போர்களிக்கும்படி சிந்தாமணியின் இரண்டாம்பதிப்பிற்சேர்க்கப்பெற்றுள்ள ஆராய்ச்சிவிளக்கம் 'ஒற்றுமைநயத்தைக்காணும்' ஆராய்ச்சிவகையிற் சேரும்.

இன்னும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூலாராய்ச்சியைக்குறித்துச் சொல்லக்கூடியவிஷயங்கள் எவ்வளவோவுள்ளன. நூலாராய்ச்சியே இன்பத்துளின்பமெனக்கொண்டுவாழும் அறிவாளர்களே. இதைப் பற்றி மிகவிமரிசையாகச்சொல்லக்கூடும். இதனை நான் விவகரிக்கப் புக்கது ' ஆசைபற்றியறையலுற்றதாகக்கொண்டு ' இதிற்காணும் வழுக்களை அறிவாளர் பொறுத்தருளுமாறுவேண்டுகின்றேன். நூலாராய்ச்சியாற் பாஷையின்விரிவும், பாஷையிற் சொற்களின் பயனும், எல்லாவிஷயங்களைப்பற்றியுஞ்சொல்லப் பொருள்நிரம்பிய சொற்கள் பாஷையில் உண்டென்னுமுண்மையும், தேசத்துச்சரித்திரமும், நாகரிகமும், மற்று மறியவேண்டிய அநேக உண்மைகளும் தெரியும். முன்னோர் ஆராய்ச்சிசெய்தமுறையையே நாமுங்கைப்பற்றி நூல்களை ஊன்றிப்படித்தோமானால் அநேகஞ் சிறந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

நூல்களின்நுட்பங்களைச் செம்மையாக அறிவதற்கு அனுகூலமாக உரையெழுதியருளிய உரையாசிரியர்களுக்கும், அவ்வுரைகளையும் மூலப்பிரதிகளையும் தெளிவுபெற ஆராய்ந்து அரிதிற்பதிப்பித்துதவும் அறிவாளராகிய மஹாவுபகாரிகளுக்கும், தமிழ்ப்பாஷாபிவிருத்தியில் விசேஷஅபிமானமுள்ளவர்களாகிய ஸேதுபதியவர்களுக்கும் தமிழுலகம்செய்யக்கூடியகைமாறு யாதுளது?

'கைமாறுவேண்டாகடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங்கொல்லோவுலகு.'

C P. வேங்கடராம ஐயர், எம். ஏ.: எல். டி.

செல்வநூல்.

ECONOMY.

"செந்தமிழ்" (தொகுதி-கஉ-பகுதி-அல்) உகூஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி.

——:o(உ)o:——

அத்யாயம்—20.

ஸர்க்கார்வரி.

Taxation.

118. ப்ராஜாபரிபாலனம்முதலான ராஜகார்யங்களை நடத்துவதற்குப் பொருளுதவிவேண்டுமல்லவா? ஒவ்வொருதேசமும் ஏதாவது ஒருவித அரசாட்சிக்குட்பட்டுத்தானிருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிடில், அராஜகம் (Anarchy) என்னுங் குறையால், தேசம், கலகத்துக்கும், கொள்ளைக்கும், பஞ்சத்துக்கும் இரையாய் அன்னியர் ஆதீனத்துக் குட்படுப்போம். அவ்வாறுநேரிடாது சரிவர ஸர்க்கார் முறைகளைநடத்துவதற்காகக் குடிகள் ஸர்க்காருக்குச்செலுத்துங் கடமையே வரி அல்லது ஸர்க்கார்வரி எனப்படும். இவை, விசேஷமாய் உள்நாட்டில் மெலியோரை வலியோர் எதிர்த்துக் கலகம், கொள்ளைமுதலானவைசெய்யாமல் அவ்வரசாட்சிக்குட்பட்ட சகல ப்ரஜைகளும் சமமாக அவ்வரசாட்சியின்பயனை அனுபவிக்குமாறு போலீஸ், க்ரிமினல்ந்யாயஸ்தலங்கள்முதலான பந்தோபஸ்துகள் செய்யவும், அன்னியதேசத்தார் தம்தேசத்திற் படையெடுத்துவந்து ஹிம்ஸிக்காதுகாப்பதற்குத்தக்க ராணுவமுதலானவை தயாரித்து வைத்துக்கொள்ளவும், தரைவியாபாரங்கள், ஜனப்போக்குவரத்து முதலானவைகளுக்குச் சாலைகள்முதலான சௌகரியங்களும், கடல் வியாபாரத்துக்குவேண்டிய துறைமுகங்களும், தேசவஸதிக்குவேண்டிய குளங்கள், தர்மவைத்யசாலைகள்முதலான சௌகர்யங்களும் செய்துகொடுக்கவும் உபயோகிக்கப்படுகின்றன.

வரிவிதிப்பதைப்பற்றிய சில முக்யவிதிகள்.

(1) வருமானத்துக்குத்தக்கவரிவிதிக்கவேண்டும். எவன் ராஜாங்கத்தின் ஆதரவால் அதிகலாபத்தையடைகின்றானோ அவன் அந்த லாபத்துக்குத் தக்கபடி, அந்தராஜாங்கத்துக்கு வரிமூலமாய் உதவி

புரியவேண்டும். தரித்திரனைப்பார்க்கிலும் தனிகன்தான் தேசத்தின் க்ஷேமத்தை யதிகமாய்க் கோரவேண்டியவன். தேசக்ஷேமத்துக்குச் சத்ருமுதலானவர்களால் அபாயம்நேரிடுமானால், அப்பொழுது அதிக நஷ்டப்படத்தக்கவன் அதுவரை அதிகலாபமடைந்த தனிகனே. தரித்திரனுக்கோ 'இந்தமடமில்லாவிடிற் சந்தமடம்' என்றவாறு என்றுமுள்ள கூலிவேலை யவனுக்குண்டு. ஆகையால், சமாதான காலத்தில், இவ்விதியைக்கவனியாது தராதரமின்றி வரிசுமத்துவது, கலகங்களுக்கு ஆஸ்பதமாய்முடிகின்றது. ப்ரான்ஸ்கலகத்துக்குக் காரணம், தனிகர் தரித்திரரைவருத்தியதென்றே சொல்லப்படும்.

(2) திட்டவரி. வரி, திட்டமாய் இவ்வளவுக்கு இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியன்றி 'தடியெடுத்தவனெல்லாம் தண்டற்காரன்' என்றபடி, ரிவினியூஉத்தியோகஸ்தர்கள் தங்களிஷ்டப்படியெல்லாம், யாதொருவிதிக்குங் கட்டுப்படாது வரிபோடுவதென்று ஏற்பட்டுவிட்டால், குடிகளுக்குப் பலவிதத் துன்பங்கள் ஏற்பட்டுவிடும்.

(3) ஸௌகரியங்கள். குடிகளுக்குச் சௌகரியமான இடம், காலம், விதம் முதலானவைகளைக்கவனித்து வரிவசூலிக்கவேண்டும்.

இடஸௌகரியம்:-வரிசெலுத்துவோர் தங்களிருப்பிடத்திலேயே செலுத்தும்படியானசௌகரியம் செய்யவேண்டும். திருநெல்வேலிக் குடியானவன் சென்னையில் வரிசெலுத்துவதென்றால் அவனுக்கு எவ்வளவுகடினமாயிருக்கும். இதை உத்தேசித்துத்தான் மணியகாரர், பில்கலெக்டர்முதலான சிப்பந்திகள், வீடுவீடாய்ப்போய் வரிவசூலித்துவருகின்றார்கள்.

காலஸௌகரியம்:-எதைக்குறித்து வரி வசூலிக்கப்படுகின்றதோ அந்தலாபம், அல்லது பலன் அடைந்தபிறகுவசூலிப்பதே நலம். மகசூல் அறுவடையாகுங்காலமான, மாசி, பங்குனிமாதங்களில்வசூலிப்பது ஜனங்களுக்கு நன்மையேயொழிய, தசகூலிமுதலானவைகளுக்குத் திண்டாடிக்கொண்டிருக்கும் சாகுபடிக்காலங்களில் வரி வசூலிப்பது ஜனங்களுக்கு மிகுந்தகஷ்டமாகும். தவிரவும், சில வரிகளைத் தவணைவாரியாய்வசூலிப்பது மிகவுஞ்சௌகரியம். ஒரே தடவையில் முழுவரியையுஞ் செலுத்துவதைப்பார்க்கிலும் 4, 5 தவணையாய்ச்செலுத்துவது எல்லோருக்கும் சௌகரியமாயிருக்கும்.

(4) லாபகரமாயிருக்கவேண்டும். ஏதாவது ஒருவரியைவிதிக்குமுன் அது செலுத்துவோனுக்கும், வசூலிக்கும் ராஜாங்கத்துக்கும் லாபகரமாயிருக்குமா, என்பதைக் கவனிக்கவேண்டும். வசூலிப்பதிற்செல்லுஞ் செலவைப்பார்க்கினும் வசூலாகுந்தொகையில் தக்கமீதம் இல்லாதவிஷயத்தில், அதனாற் குடிகளுக்குக்கஷ்டமே யொழிய ராஜாங்கத்துக்குத் தக்கலாபம் ஏற்படமாட்டாது. மேலும், வரிசெலுத்தியபிறகு செலுத்துவோனுக்கு மீதம் ஒன்றும் இல்லாவிட்டால், அதனால் அவன்தொழிலே கெட்டுப்போம்.

119. உப்பு, அரிசிமுதலான காலக்ஷேபத்துக்கு அவசியமான வஸ்துக்களுக்கு வரிவிதிப்பதால் ஜனங்களுக்கு மிகுந்தகஷ்டமும், கொள்ளைநோயும் பஞ்சமும் ஏற்படும். அபின், சாராயம், கஞ்சாமுதலான லாகிரிபதார்த்தங்களுக்குத் தீர்வை ஏற்படுத்தலாம். அது, ஸர்க்காருக்கு லாபத்தைக்கொடுப்பதுடன், ஜனங்களும் லாகிரிவஸ்துக்களை யதிகமாயுபயோகிக்காது தவிர்க்கவும் சாதகமாயிருக்கும்.

(Raw Materials.)

120. விளைபொருள்களுக்கு வரி ஏற்படுத்தலாகாது என்பது ஓர் அபிப்ராயம். பருத்திமகசூலுக்கு விளைவுக்குத்தக்கவாறு வரி ஏற்படுத்துவதானால், நிலத்தீர்வையைத்தவிர வேறு இரண்டாந் தீர்வை யேற்படுத்தவேண்டிவரும். அப்படியாயின் ஒப்படிகாலங்களில் ஸர்க்காருக்குத்தெரிவித்துத்தான் ஒப்படிசெய்யநேரிடும். அதனால் அதைக் கங்காணம்செய்ய, ஸர்க்கார்சிப்பந்திகள் அதிகப்படுத்தவேண்டியதுடன் ஜனங்களுக்கும் மிகுந்தகஷ்டமேற்படுமே யொழிய அதற்குத்தக்கலாபம் ஸர்க்காருக்கு ஏற்படமாட்டாது.

நேர்வரி. பொறுப்புவரி.

Direct and Indirect Taxations.

121. வரிகள் நேர்வரிகள் என்றும் பொறுப்புவரிகள் என்றும் இரண்டுவகையாய்க்கூறப்படும்.

நேர்வரி. வரிசெலுத்துவோனிடம் நேரேவசூலிப்பது, நேர்வரியாகும். வருமானவரி (Income-tax) ஆள்வரிமுதலானவைகள் இவ்வகுப்பைச்சேர்ந்தவை. இதிற் பொறுப்பவனும் செலுத்துபவனும் ஒருவனே.

c

பொறுப்புவரி. அப்படிக்கல்லாது உண்மையாய் வரியைப் பொறுத்துக்கொள்பவனிடம் வாங்காது வேறு நடுமனிதனிடம் வாங்குவதே பொறுப்புவரியெனப்படும். துணிமுதலான செய் பொருள்களுக்குவிதிக்கும்வரி, நெசவுகாரர்களாற் செலுத்தப்படு கின்றது. ஆயினும், அவ்வரிக்குத்தக்கவாறு, அவர்கள் விலையை யுயர்த்திவிடுவார்களாதலால், கடைசியாய் அத்துணியை உபயோகிப் பவனே அவ்வரியைப்பொறுக்கிறான். இதிற் பொறுப்பவன் வேறு. செலுத்துபவன் வேறு.

வருமானவரி.

Income-tax.

122. குடிகளில் அவரவர்வருமானத்துக்குத்தக்கபடி வரிவிதிப் பதே வருமானவரியெனப்படும். வைத்யம், வியாபாரம், வக்கீல்உத் யோகம், ஸர்க்கார்உத்யோகம், லேவாதேவிமுதலான எண்ணிறந்த வருமானங்கள் இவ்வரிக்குட்பட்டுவிடுகின்றன. உண்மையில் இந்த வரிதான் குடிகள்யாவரும் தங்கள்செல்வநிலைக்குத்தக்கவாறு செலுத் தக்கூடியவரி. ஆயிரம்ரூபாய்வருமானத்துக்குக்குறைந்தோருக்கு இவ்வரிகிடையாதாதலால் ஏழைகளுக்கு இதனாற் பாதகமில்லை.

இவ்வரி முதன்முதற் சொற்பகாலத்துக்கென்றே ஸர்க்கார் அவஸரச்செலவையுத்தேசித்து விதிக்கப்பட்டது. முடிவில் அது ஸ்திரமாகவேநிலைத்துவிட்டது.

நிலவரி.

Land-tax.

123. நிலத்தின்தரத்துக்கும் விஸ்தீர்ணத்துக்குந்தக்கவாறு விதிக்கப்படும்வரியே நிலவரியெனப்படும். பொதுவாய் நிலவரி செலுத்துபவன் நிலஸ்வான்தாரராம். ரயத்வாரி என்றும் ஜமீன்தாரி என்றும் முக்யமாய் நிலவரி இரண்டுவகைப்படும். ரயத் அல்லது குடிகளிடமிருந்து அயன் நிலத்தீர்வையைப்போல நேரேவாங்குவது ரயத்வாரி எனப்படும்.

124. ஜமீன்தாரி. ஜமீன் என்றால் ஹிந்துஸ்தானியில் பூமி என்றர்த்தம். ஜமீன்தாரி என்பது, ஜமீன்தார் என்னும் நடுமனிதன் அல்லது பூஸ்வான்தாருக்குச் சாசுவதத்தீர்வைவிதித்து ஏராளமான பூமியைக் குத்தகைவிடுவதும், அவன் குடிகளிடமிருந்து மேல்வாரம் பகிர்ந்துகொள்ளுவதும், ஸர்க்கார்த்தீர்வைக்கு ஜமீன்தாரே ஜாமீன் தாராயிருப்பதுமான ஏற்பாடு.

இதைப்பற்றி விசேஷமாய் அடுத்தப்ரகரணத்திற் சொல்லப்படும்.

(தொடரும்.)

உ

செல்வநூல்.

ECONOMY.

அனுபந்தம்.

APPENDIX.

செல்வம்.

செல்வவிருத்தி	செல்வவிபாகம்	செல்வபரிவர்த்தனை
நிலம்	வாரம்	
முதல்	வட்டி	
வேலை	கூலி	

	வேலை	1	
	வேலைப்பிரிவு (Division of Labour)	2	சாதகம். பாதகம்.
வேலை	தனிவேலை	3	
	கூட்டுவேலை	4	
	கலப்புவேலை	5	

முதல். செல்வவிருத்திக்கு உபயோகமானசெல்வமே முதல் எனப்படும். இதனால் முதலெல்லாம் செல்வமாகும். ஆனால் செல்வமெல்லாம் முதலாகாது. ஆகாரம்முதலான அவசியப்பொருள்களும் நகைகள்முதலான அதிபோக்ய (Luxury) வஸ்துக்களும், செல்வமாகும். ஆயினும் அவைகள் உடையவர்களுக்கு உபயோகமாயினும் அவைகளைக்கொண்டு செல்வத்தை விருத்திசெய்யமுடியாதாகையால் அவைகள் முதலாகமாட்டா. யந்த்ரம்முதலானவைகள் செல்வவிருத்திக்குச்சாதகமானவையாதலால் அவைகள் முதல் எனப்படும்.

Fixed capital.

Circulating capital.

முதல்தேடும்வகை.

Investment of capital.

வேலை ஒரு முதலல்ல.

104. வேலையும் ஜாஸ்திப்பலனும். ஒருவேலையைக்கொண்டு ஜாஸ்திப்பலனையடைவதற்கு மூன்றுவழிகள் உண்டு. அவை யாவன:—

(1) தக்கபருவத்தில்

(2) தக்க இடத்தில்

(3) சிறந்தமாதிரியாய்ச்

செய்யப்பட்டவேலைகளெல்லாம் ஜாஸ்திப்பலனைத்தருகின்றன.

தக்கபருவம். காற்றுள்ளபோதேதூற்றிக்கொள் என்றபடி, பருவம்பார்த்துப் பயிரிட்டால், சரியானபலனுண்டு. தீபாவளிசமயத்திற்செய்தவெடிகள் சீக்கிரம்விற்பனையாகும். மழைகாலத்துக்கு முன், விறகுமுதலானவை சேகரித்துவைக்கவேண்டும்.

தக்க இடம். இடத்துக்குத்தக்கபடி பயிரிடவேண்டும். குளிர்ந்த தேசங்களில் வாழைமுதலான உஷ்ணதேசப்பயிர்கள் உண்டாக மாட்டா. அதேமாதிரி மலைகளிற் குளிர்ந்தஇடங்களில் உண்டாக வேண்டிய காபி, தேயிலை, ப்ளூகம்முதலானவை தரையில் உஷ்ண ப்ரதேசங்களிலுண்டாகமாட்டா. ஆதலால் நிலத்தின்தன்மையையும், சீதோஷ்ணநிலைமைகளையும் கவனித்து அதற்குத்தக்கவாறு பயிரிடுவதே தக்கபலனைத்தரும்.

சிறந்தமாதிரி. வேலைசெய்யும்மாதிரிக்குத்தக்கபடிக்கும் பலன் ஏற்படுகின்றது. அது வேலைக்காரனுடையபுத்தியையும், சாமர்த்தியத்தையும் பொறுத்தது. சிறந்தமாதிரியாய்வேலைசெய்ய இரண்டு முக்யமானவழிகள்:—

(1) சாஸ்த்ரப்பயிற்சி.

(2) வேலைவிபாகம்.

சாஸ்த்ரப்பயிற்சி. இன்னபலனடைவதற்கு இன்னகாரியம்செய்ய வேண்டுமென்பதும், அக்காரியமுறைகளும், அவைகளைச் சரிவர

நடத்தவேண்டியவிதங்களும் சாஸ்த்ரஞானத்தால்தான் அறியமுடியும். தண்ணீரைக்காய்ச்சினால் நீராவியாகும்; நீராவி வேகமாய்ப் பரவும்; அதனால் ஒருவிதசக்தியுண்டாகும்; அச்சக்தியால், கனத்த வண்டியிழுத்தல், பாரம்தூக்கல்முதலானவேலைகள் செய்யமுடியும். இவைகளைச்செய்யும் யந்திரந்தான் நீராவியந்திரம் (Steam Engine) என்னும் அறிவு சாஸ்த்ரப்பயிற்சியால்தான் ஏற்படும். சாலைபோடுவதிற் சாதாரணமாய் 100 கூலியாட்கள்செய்யும்வேலையை ஒரு நீராவியுருளை அழகாய்ச்செய்துவிடுகின்றது.

11. 5-வதுசாதகம். அதிகவேலைநடக்கும்.

உதாரணம். 2 மைல்தூரத்திலுள்ள தபாற்பெட்டியில் ஒரு கடிதத்தைக்கொண்டுபோய்ப் போட ஒருவனுக்கு எவ்வளவுச்ரமமோ அவ்வளவுதான் 5 கடிதங்களைப்போடவும் ஆகின்றது. ஒருகிராமத்திலிருந்து ஒவ்வொருவனும் தன்தன்கடிதத்தைத் தானேகொண்டு போய்ப்போடுவதைப்பார்க்கிலும், ஒரு பொதுமனிதனை அமர்த்தியனுப்பினால், அவனுக்கு அதிகச்ரமமில்லை. இவர்கள் வேறுவேலை பார்க்கலாம். எல்லோருஞ்சேர்ந்து அனுப்பினால், கடிதமனுப்புஞ்செலவும் சுருக்கமாகும். இதுதான் தபால்முறை. 10 பேர் காசியாத்ரை போகையில், எல்லோருஞ்சேர்ந்து ஒரேசத்திரத்தில் தங்கினால், ஒருவன் சாமான்களைப்பார்த்துக்கொள்ளலாம், ஒருவன் சாமான்கள் வாங்கிவரலாம், ஒருவன் அடுப்புமெழுகலாம், ஒருவன் பாத்திரம் சுத்திசெய்யலாம், ஒருவன் சமையல்செய்யலாம், எல்லோரும் சாப்பிடலாம். இவ்வாறு வேலைவிபாகத்தால், காரியம் விரைவாய்முடிகின்றது. ஆளுக்குக்கொஞ்சம்வேலையானதால், தனித்தனி எல்லாவேலையையும் பார்ப்பதுபோல் அதிக ச்ரமமுமில்லை.

6-வது அதிகச்சரக்குகள்செய்யலாம். ஒருகுண்டூசியந்திரஞ்செய்ய எவ்வளவோ வேலையாகும். செய்தாய்விட்டால் ஆயிரக்கணக்கான குண்டூசிகள் அதேதொழிலாயிருப்பவன் விரைவிற் செய்துமுடிப்பான். அவைகளை ஆயிரக்கணக்கானஜனங்கள், சொற்பவிலைக்குவாங்கி உபயோகிப்பார்கள். அப்படிக்கல்லாது குண்டூசிதேவையான ஒவ்வொருவனும் தானேசெய்துகொள்வதென்றால், எவ்வளவுகாலதாமதமும் எவ்வளவுபணச்செலவும் எவ்வளவு ச்ரமமுமாகும்?

இதேமாதிரி, புஸ்தகம் அச்சடிப்பதேதொழிலாயுள்ளவன், ஷேக்ஸ்பியர்நாடகமொன்றை ஆயிரக்கணக்காய் அச்சடித்து, ப்ரதி ஒன்று இரண்டணுவீதம் விற்பான். அப்படியன்றி ஒவ்வொருவனும் தானே ஒருப்ரதி தயாரிப்பதென்றால் எவ்வளவுச்ரமமும், எவ்வளவு காலமும், எவ்வளவுபணச்செலவுமாகும்.

7. ஆளுக்குத்தக்கவேலை. (Personal Adaptation) வேலை விபாகத்தால், ஒவ்வொருவனும் தன்தன் சரீரபலத்துக்கும் புத்தித் திறமைக்கும் தக்கவாறு தொழிலைத்தேடிக்கொள்ளலாம். கைவலுவுள்ளவன் கொல்வேலைசெய்யலாம். வலுவில்லாதவன், பருத்திநூற்கலாம். யந்த்ரயூகமுடையவன், கடிகாரம்செய்தல், யந்த்ரநிர்மாணம் முதலான யூகவேலைகள்செய்வான். யூகமில்லாதவன், கல்புரட்டல் முதலான முரட்டுவேலைசெய்யலாம். அதிகப்படித்தவன் உயர்ந்த உத்யோகங்களுக்குப்போகலாம். சொற்பப்படிப்புள்ளவன் குமாஸ்தாவாயிருக்கலாம்.

8. இடத்துக்குத்தக்கவேலை. (Local Adaptation) எந்த இடத்தில் என்னஸாமான்கள்கிடைக்குமோ அதை அங்கேயே சரக்குச்செய்வது சௌகரியம். கரும்பு உண்டாகும் இடத்திலேயே ஆலைவைத்து வேலைசெய்தால், கரும்புச்சக்கையையும் தூக்கிச்செல்லும் ச்ரமமும் பணச்செலவும் லாபமாகும். நெல்லை அனுப்புவதைப் பார்க்கிலும் நெல்விளையுமிடத்திலேயே அதைக் குத்தி அரிசியாக ஏற்றுமதிசெய்தால், உமியையுமனுப்புஞ்செலவு லாபமல்லவா?

மேற்கூறியவைகளினின்றும் நாம் முக்யமாயறிவதென்னவென்றால், ஒவ்வொருவனும் பல வேலைசெய்யத்தொடங்கிப் பாழாய்ப் போவதைப்பார்க்கிலும், ஒவ்வொருவேலையில் தேர்ச்சியடைந்தால், பலவேலைதெரிந்த பலர்சேர்ந்து பெரியகாரியங்களைச் சரியானபடி சாதிக்கலாம் என்பதே.

விபாகமுறை.—செல்வவிருத்திக்குச் சாதனமாயுள்ளவை, இடம், பொருள், ஏவல் என்றும் அவை எவ்வாறு முறையே செல்வத்தை உண்டுபண்ணுகின்றனவென்றும் முன்விவரிக்கப்பட்டது. அவ்வாறுண்டானசெல்வம் எவ்வாறுபிரித்துக்கொள்ளப்படுகின்றதென்பது இனிவிவரிக்கப்படும். இடம் அல்லது நிலத்தையுடையவன் நிலக்காரன் என்றும், பொருள் அல்லது முதல்போடுபவன் முதலாளியென்றும், ஏவல் அல்லது வேலைசெய்பவன் வேலைக்காரன் என்றும் சொன்னோம். உண்டானசெல்வத்தை அவர்கள் தம்தம் உரிமைக்குத்தக்கபடி பிரித்துக்கொள்ளுகின்றார்கள்.

நிலம்	வேலை	முதல்
நிலக்காரன்	வேலைக்காரன்	முதலாளி
வாரம்	கூலி	லாபம்

வாரம், கூலி, லாபம், என்னும் விபாகங்களைத்தவிர, ஸர்க்காருக்குச்சேரக்கூடிய வரி அல்லது தீர்வையென்பதும் 4-வதுபாகமாய் ஏற்படுகின்றது. ஆகையால், உண்டானசெல்வம்,

=வாரம்+கூலி+லாபம்+வரி.

பரிவர்த்தனை (Exchange) தன்னிடத்து அதிகமாய் உள்ளதைக்கொடுத்துத் தனக்கவசியமானதைக்கொள்வதே பரிவர்த்தனையாம். ஒருவனுக்குவரும் 100-கலம்நெல்லில், வருஷச்செலவு 50 கலம்போக, பாக்கியான 50 கலத்தைக்கொண்டு தனக்கு அவசியமானதும், தன்னிடமில்லாததுமான துணிகள், உளுந்து, பருப்பு, பருத்தி முதலானவைகள்வாங்குவான். இதைத்தான் பரிவர்த்தனையென்பார்கள்.

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.